மாபெரும் ஷைகு

முஹியித்தீன் இப்னுல் அரபி

Katheejaa manzil
Balaji nagar madurai - 5.
9344312557

ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,
எழுதியது.

முதல் பதிப்பு : மார்ச்சு 1966

விலை ரூ 2-50

வெளியீடு
அருள் நூல் பதிப்பகம்,
தென்காசி.

அருள் நூல் பதிப்பகம்,
22-A, மயிலை பெரியதம்பி தெரு,
சென்னை - 1

முன்னுரை

எல்லாம் வல்ல நல் அருளாளனை அல்லாஹ்வின் நல்லுதவியாலும், எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நல் ஆசியாலும் 'மாபெரும் ஷைகு முஹியித்தீன் இப்னுல் அரபி' தமிழ் கூறும் நல் உலகின் முன் சமர்ப்பணமாகிறது.

ஷைகுல் அக்பரின் பெயர் தமிழ் நாட்டு அறிஞர் பெருமக்களிடை மதிப்போடும் மரியாதையோடும் போற்றிக் கொண்டாடப் படுவதுதான்; பயபக்தியோடு அவர்களைப் பற்றிப் பேசுபவர்கள் ஏராளம். ஆனால், அவர்களைப் பற்றிய, அவர்களுடைய நூற்களை அறிமுகப்படுத்தும் முறையான நூல் எதுவும் இதுவரை தமிழில் வராதது பெரிய குறைதான் என்பதில் ஐயமில்லை.

இவ்வகையில் சிறிய அளவிலேனும் இப்பணியை ஆற்ற எனக்கு உதவிய வல்ல நாயனுக்குகே சகல புகழும்! என் குறைகளை நன்கு அறிந்தவன் நான்; எனவே, இத்தகைய பாரதூரமான வேலைக்கு நான் பொருத்தமுடையவனாக இல்லாமல் இருந்தும், இறையருளால் கிடைத்த விபரங்களைக் கொண்டு இதை ஆக்கியுள்ளேன்.

ஷைகுல் அக்பருடைய கருத்துக்களில் எதிலேனும் கருத்து வேற்றுமை காணக்

கூடிய அறிஞர்கள் யாரும் இருப்பின், அவை இந்த நூலாசிரியனுடைய சொந்தக் கருத்துக்கள் அல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதில் நான் அறிந்தோ அறியாமலோ ஏற்பட்டிருக்கக்கூடிய குற்றங் குறைகளை அன்பர்கள் எடுத்துக்காட்டினால், இன்ஷா அல்லாஹ், மறு பதிப்பில் நன்றியுடன் திருத்திக் கொள்வேன்.

ஆர். பி. எம். கனி.

பொருளடக்கம்.

வாழ்க்கை.

நூற்களிலிருந்து

மெய்ஞ்ஞான விளக்கம்

வாழ்க்கை

மாபெரும் ஷைகு

முஹியித்தீன் இப்னுல் அரபி

கௌதுல் அஃலமின் ஆத்மீக வாரிஸ்

நமது ஆண்டகை ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களுடைய நல்லாசியால், அவர்கள் ஆத்மீக வாரிஸாய்க் கருவில் திருவாகத் தோன்றிய மெய்ஞ்ஞானக் கருவூலர், எம்பெருமான் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பன்முறை கனவில் கண்டு வசனிக்கும் மகா பேறு பெற்ற மகான், முன்னூறுக்கு மேற்பட்ட – 500 என்றும் சொல்லப் படும்–பாரதூரமான உலகம் கண்டிராத அதி அற்புதமான அகமிய ஞானக் கிரந்தங்களை உதவியவர்கள், உலகிற்கு உன்னதமான கலைப் பண்பை நல்கிய முஸ்லிம் ஸ்பெயினில் தோன்றியவர்கள், மக்களிடை மகத்தான மதிப்பைப் பெற்று, சென்ற இடமெல்லாம் சிறப்புடன் வாழ்ந்த மாபெரும் ஷைகு (ஷைகுல் அக்பர்), ஹுஜ்ஜத் துல்லாஹில் ழாகிரு (அல்லாஹ்வின் புற அத்தாட்சியாக விளங்கியவர்கள்) என்றும், ஆயத் துல்லாஹில் பாஹிரா (அல்லாஹ்வின் வியத்தகு அற்புதமாக விளங்கியவர்கள்) என்றும் போற்றப்பட்ட ஞானவாரிதி, 'இஸ்லாமிய உலகிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க மாபெரும் சிந்தனையாளர்' என்று மேல்நாட்டு அறிஞர் பெருமக்களாலும் போற்றிக் கொண்டாடப்படுபவர்கள், அள்ளிக் கொடுத்து

உலகப் புகழ் பெற்ற ஹாத்தீம் தாயியின் வழித் தோன்றல், கொடையில் தம் முன்னோருக்கும் சளையாத வள்ளலாக விளங்கியவர்கள்—இத்தகைய பல்வேறு புகழுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள் முஹியித்தீன் இப்னுல் அரபி ஆவார்கள். இந்த மகானுடைய வாழ்வையும், நூற்களையும், இவர்கள் தந்த ஆத்ம ஞான விளக்கங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டுவது மிக மிக அவசியம் ஆகும்.

கலை வண்ணமும், அறிவுச் சுடரும் அதிகமாக வீசிக்கொண்டிருந்த முஸ்லிம் ஸ்பெயினிலே முர்ஸியா என்று ஒரு ஊர். கண்கவர் வனப்பு மிக்க நீரோடைகளும், பூங்காக்களும், பழத் தோட்டங்களும் நிறைந்து இயற்கை கொஞ்சும் எழில் நிரம்பிய அந்த ஊரில் அலீ இப்னு முஹம்மதுத் தாய் என்ற பெயருடைய செல்வர் ஒருவர் வாழ்ந்திருந்தார். செல்வ வளங்கொழிக்கும் வாழ்வு நடாத்திய இவர் சிறந்த கல்விமானாகவும், அந்தக் கல்வியால் உண்டான பண்பாடுகளை அடையப் பெற்றவராகவும் இருந்தார். தேவை என வந்தோர்க்கு இவர் இல்லம் என்றும் திறந்ததாகவே இருந்து வந்தது. ஞானியர்கள், பெரியார்களைத் தரிசிப்பதிலும், அவர்களுக்குச் சேவை செய்வதிலும் இவர் இன்பங் கண்டுவந்தார். ஆனால், இத்தகைய கருணை மனம் படைத்த அலீ இப்னு முஹம்மதுக்கு மகப் பேறு இல்லாத குறை பெரிய குறையாக இருந்து வந்தது. தமது வருவாயில் பெரும் பகுதியைத் தருமத்தில் செலவு செய்து இறைவனிடம் மன்றாடியும் ஐம்பது வயது வரை அவருக்கு பிள்ளையே பிறக்கவில்லை. அப்போது ஹஜ்ரத்

கௌதுல் அஃலம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் பக்தாத்தில் தீன் பயிர் விளைத்துக் கொண்டிருந்த செய்தி உலகெங்கணும் பரவி இருந்தது. முஸ்லிம் ஸ்பெயினிலிருந்தும் எண்ணற்றவர்கள் பக்தாத் வந்து ஆண்டகை அவர்களை நேரில் காணும் பேற்றையும், அவர்களின் நல்லுபதேசத்தை அள்ளிப் பருகும் பாக்கியத்தையும் அடையப் பெற்றனர். எனவே, ஹிஜ்ரி 560-ம் ஆண்டின் தொடக்கத்தில் அலீ இப்னு முஹம்மது முர்ஸியாவை விட்டுப் புறப்பட்டுப் பக்தாத் வந்தடைந்தார். ஆண்டகை அவர்கள் தங்கள் சேவைகளை முடித்துக்கொண்டு பூத உடல் நீக்க இன்னும் சில மாதங்களே இருந்த சமயம் அது. அவர்களை நேரில் கண்டு தமது குறையை முறையிட்டார் அலீ இப்னு முஹம்மது. அவர்கள் கால்களைக் கட்டிக்கொண்டு, "ஆண்டகையே, மகப் பேறு இல்லா என் குறை நீங்க அல்லாஹ்வின் பக்கல் இறைஞ்சி எனக்கு ஒரு புதல்வன் கிடைக்க நல்லருள் புரிய வேண்டும்" என்று மன்றாடினார். ஆண்டகை அவர்கள் சற்று நேரம் கண்களை மூடியவர்களாக அமர்ந்திருந்தார்கள். உதிப்பின் மூலம் அந்த நல்ல மனிதருக்குச் சொந்தமாகக் குழந்தை இல்லை என்பதைக் கண்ட அவர்கள், தங்கள் ஞானவாரிசாக, தங்கள் முதுகந் தண்டிலிருந்து குழந்தை ஒன்றை அவருக்கு மாற்றிக் கொடுக்க அனுமதி பெற்றார்கள். அந்தச் சிசுவை அவர் முதுகந் தண்டுக்கு மாற்றிக் கொடுத்துவிட்டு அவர்கள் அருளினார்கள், "அலீயே, நீர் என் புறத்திலிருந்த அடைந்த சத் புத்திரனைப் பெறுவீர். அந்தப் புதல்வனுக்கு எமது பாட்டனார் திருப்

பெயரான முஹம்மது என்ற நாமத்தையும், எமது பட்டப் பெயரான முஹியித்தீன் என்பதையும் சூட்டுவீராக. அந்தப் புதல்வர் மெய்யருள் ஞானத்தில் கடல் போன்ற அறிவு பெற்ற ஞான மகானாகவும், என் ஆத்ம வாரிசாகவும் விளங்குவார். மெய்ஞ்ஞான அகமியங்களையும், திருமறை, ஹதீஸ் அகமியங்களையும் விளக்கி அவர் ஏராளமான நூற்களை எழுதி சன்மார்க்கத்துக்குப் பெருஞ் சேவை செய்வார்" என்று. இந்த ஆசியைப் பெற்ற அலீ இப்னு முஹம்மது மகிழ்ச்சிப் பரவசராய்த் தமது ஊர் திரும்பினுர்.

நமது ஆண்டகை அவர்கள் காலமாகிய ஐந்தாம் மாதம் அவர்களுடைய அருளால் உண்டான ஆண் மகவு ஜனனமாயிற்று. ஹிஜ்ரி 560 ரமலான் பிறை பதினேழு திங்கட்கிழமை அன்று (கி. பி. 1165 ஜுலை 29) ஷைகு முஹம்மது முஹியித்தீன் இப்னுல் அரபி பிறந்தார்கள்.

கல்வி ஞானம்

இயற்கையிலேயே இதய ஆழமும், அறிவுக் கூர்மையும் பெற்றிருந்த ஷைகுல் அக்பர் அவர்கள் தங்கள் சிறிய வயதிலேயே சகல கல்விகளிலும் பிரமிக்கத்தக்க தேர்வு பெற்றுர்கள். கல்விமானுன அவர் தந்தையாரும் அவர்களுக்குத் தம்மால் இயன்ற பாடபோதனைகளை எல்லாம் செய்து வைத்தார். தமது பகுதிகளிலுள்ள அறிஞர் பெருமக்களை அழைத்து வந்து தமது புதல்வனுக்கு கல்வி புகட்டுமாறு செய்தார். ஷைகுல் அக்பர் எட்டு வயதை அடைந்ததும் (ஹிஜ்ரி 568ல்) அவர்கள் தந்தையார் அவர்களைத் தமது ஊர்

இருந்த மாகாணத்தின் தலைநகரமும், கலை வளங்கள் கொழித்துக் கொண்டிருந்ததுமான செவைல் நகருக்கு அழைத்தேகினர். ஷைகு அபூ பக்கர் இப்னு கலாப் என்பாரிடம் திருகுர்ஆனையும், இப்னு முஅல்லிஃப் அபுல் ஹஸன் ஷரீஹ் என்பாரிடம் ஹதீஸையும் ஷைகுல் அக்பர் பயின்றூர்கள். பிக்ஹு கலையை அவர்களுடைய தந்தையாரான அலீயே அவர்களுக்குத் தொடர்ந்து போதித்து வந்தார்கள். ஷைகுல் அக்பர் முஸ்லிம் ஸ்பெயினில் அன்று பெரும்பாலாக நிலவிய மாலிக்கி மத்ஹபைச் சேர்ந்தவர்கள். அதில் பெரிய அறிஞராக விளங்கிய அபுல் காஸிம் ஷர்ரத் என்பாரிடமும் பிக்ஹு சட்டங்களை அவர்கள் கற்று அறிந்து கொண்டார்கள்.

ஸெவைலில் மிகப் பிரபலமாக விளங்கிய திருமறை விளக்க வகுப்புகளை அபூ பக்கர் முஹம்மது என்பவர் நடத்தி வந்தார். அந்த வகுப்புகளில் சென்று அமர்ந்தும் ஷைகுல் அக்பர் அறிவு பெற்றூர்கள். இஃதே போன்று அன்றைய ஹதீஸ் விளக்கக் கலையில் பிரபலமான வகுப்புகளை நடாத்திய இப்னு ஸர்கூன், அபூ முஹம்மது அப்துல் ஹஜ் அஜ்தி ஆகியோரின் வகுப்புகளில் அமர்ந்து அந்தப் பாடங்களை அவர்கள் அள்ளிப் பருகினர்கள்.

அவர்கள் கால முஸ்லிம் ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆதிக்கம் குன்றி வந்ததாயினும் ஏற்கனவே முஸ்லிம் அறிஞர்கள் சேமித்து வைத்திருந்த பல்வேறு கலைஞானங்களும் தேடுபவர்களுக்குக் கிடைப்பவையாய்த் திறந்த நூற்களாய் மிளிர்ந்து

கொண்டிருந்தன. இதனுல், ஜொராஸ்தரிய சமயம், யூத மதம், கிறிஸ்தவம், கிரேக்கத் தத்துவம், கணிதம் போன்ற எண்ணற்ற துறைகள் சம்பந்தப்பட்ட ஏராளமான கிரந்தங்களைப் படித்துச் சிந்திக்கும் வாய்ப்பும் ஷைகுல் அக்பருக்குக் கிடைத்தது அவர்களும் தங்களுடைய அறிவுப் பசி காரணமாகக் கிடைத்த கலைகள் அனைத்தையும் படித்தறிந்து சிந்தித்துத் தங்கள் அறிவுக் கஜானுவில் சேர்த்துக்கொண்டார்கள்.

ஸெவைலில் அவர்கள் மாணவராக இருந்த காலையில் அவர்களுடைய அசாதாரணமான அறிவுத் திறனையும் விளக்க சக்தியையும் கண்ட ஹதீஸ் விளக்க ஆசிரியர்கள் வாலிபரான அவர்களையே ஹதீஸ் விளக்கம் செய்யுமாறு ஆக்ஞையிட்டனர். இது அபூர்வமாகக் கிட்டும் பாக்கியமாகும். வாலிபர் இப்னுல் அரபி முதுபெரும் ஹதீஸ்கலை கிழவர்கள் எல்லாம் வியக்கும் வண்ணம் அருமையாக ஹதீஸ் விளக்கம் தந்து புகழ் பெற்ருர்கள். அந்தச் சபையில் அமர்ந்திருந்த ஸ்பெயின் நாட்டு பிரபலமான மார்க்க மேதைகளான இப்னுல் ஜௌலி, அபுல் பரஜ், இப்னுல் அஸாக்கிர், ஹாபீஸ் அஸ் ஸலஃபீ ஆகியோரின் ஒருமுகமான பாராட்டுதல்களையும் பெற்ருர்கள்.

ஷைகுல் அக்பரை அறிஞர்பால் ஈர்த்த இன்னொரு அம்சம் அவர்களுடைய அப்பழுக்கற்ற ஒழுக்கமும், சத்வணக்கங்களும், எளிய வாழ்வும் ஆகும். இளைஞர் இப்னுல் அரபியின் கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையையும், மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் சற்றும் சளையாத

இயல்பையும், ஏராளமான செல்வ வசதிகள் இருந்தும் எளிமையையும், கஷ்டங்களையும் அவர்கள் உவந்து ஏற்றதையும் கண்ட பெரியார் கள் அவர்களைப் பெருமதிப்புடன் நடத்தினர்.

வெளியூர்களிலிருந்து ஸெய்வல் வரும் பலரும் ஷைகுல் அக்பருடைய புகழை அறிந்து மாணவர் ஆன அவர்களைக் கண்டுசெல்ல வருவதுண்டு. அவர்கள் தங்கள் படிப்பு நேரம் போக ஓய்வு நேரங்களில் ஸஹபியாக்களையும் ஞானநாதர் களையும் கண்டு அவர்களுக்குக் குற்றேவல் புரி வதில் இன்பங்கண்டு வந்தார்கள். அப்பொழுதே ஞானப் பாடல்கள் இயற்றுவதும் அவர்களுக்குக் கைவரலாயிற்று.

கனவுகள் மூலம் காட்சிகள்

இத்தகைய பரிபக்குவமான நிலையில் அவர்கள் வளர்ந்ததோடு அவர்களிடம் விலாயத்துக்கான பல்வேறு உன்னதப் பண்புகளும் வளரலாயின. தெளிவான, கறைபடியாத இதயம் பெற்றிருந்த அவர்கள் நூற்களில் படித்த அறிவையன்றி உதிப்பின் மூலம் ஞானம் அடையும் பக்குவத்தை யும் பெற்றுவிட்டார்கள். அடிக்கடி மஸ்தடைந் தவர்கள் போல் இருப்பதும், மயக்கமாகி விழுவதும் உண்டு. கனவுக் காட்சிகள் காண்பதும் அவர் களுக்குக் கைவரலாயிற்று. கனவுமூலம் மறை வான உலகின் தரிசனங்களையும், ஞானப் பெருக் கத்தையும் அடைவது மெய்யறிவின் முக்கியமான அம்சமாகும். இதில் ஷைகுல் அக்பர் அசைக்க இயலா நம்பிக்கையும் வைத்திருந்தார்கள். அவர்கள் எழுதுகிறார்கள்: "கனவுகளில் ஒருவன்

தன் மனக் கட்டுப்பாடைச் சரியான நிலையில் வைத்திருக்கவேண்டும். விழிப்பு நிலையில் போல் கனவு நிலையிலும் அப்படியானால்தான், அவன் தன் சிந்தனையால் ஒழுங்குபடுத்திய எண்ணங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இயலும். இத் தகைய மனப்பக்குவம் அடைந்து விட்டவன், இதைத் தன் பழக்கமாக ஆக்கிக் கொள்பவன், அதற்கான சம்மானத்தை திறையுலகில் (பர்ஜகில்) அடைந்து, அதனால் பெரிதும் பயன் பெற்றுக் கொள்வான். மனிதன் ஒவ்வொருவனும் இதைப் பழக்கத்தில் கொண்டுவர முயலவேண்டும். ஏன் எனில், இறைவன் நாடினால் இதனால் அதிகமும் பயனுண்டு."

காரியஸ்தர் வேலை

ஸெவைலில் உயர்தரக் கல்விகளை யெல்லாம் முடித்துப் பூரணம் பெற்ற அவர்களுடைய அறிவுத் திறன் நாடு முழுவதும் பரவிவிட்டது. பிரபுக்கள், அரசர்கள் பலர் அவர்களைத் தமது காரியஸ்தராக இருந்து சேவை செய்யும்படி அழைத்தனர். இந்த அழைப்பை ஏற்று சிற்றரசர் ஒருவரிடம் அவர்கள் காரியஸ்தர் வேலையையும் சில காலம் செய்து வந்துள்ளார்கள். தங்கள் மனப் போக்குக்கும், அகமிய ஞானத்தை நேரடி அனுபவங்களால் அடையவேண்டும் என்ற அவாவுக்கும் இது இணங்கிவராது என்று கண்ட ஷைகுல் அக்பர் இந்தத் தொடர்புகளை விட்டு விலகித் தனிமை யிலும் தியானத்திலும் அதிகமதிகம் ஈடுபடல் ஆனார்கள்.

கிலுரு (அலை) கையால் கிர்க்காப் பெறுதல்

திறையை விலக்கிக் காட்சிகள் காணும் சக்தி வளர வளர அவர்களுடைய தவமும் வளர்ந்தது. இதைப் பூர்த்தி செய்வதற்காகத் தங்களை யாரும் அறியாத ஊர் ஒன்றில் சென்று அதன் கப்ருஸ்தானில் கப்ரு ஒன்றிலேயே அவர்கள் இருந்து தங்கள் மனத்தைப் பரிபக்குவப் படுத்திக் கொண்டார்கள். இரவில் யாவரும் தூங்கியபின் வெளியில் வந்து எங்காவது காய்ந்த ரொட்டி கிடைத்தால் தண்ணீரில் நனைத்து உண்பது, இல்லாவிடில் பட்டினியாகவே இருந்துவிடுவது. இப்படிப்பட்ட சில மாத தவத்தின் பயனாக ஹஜ்ரத் கிலுரு (அலை) அவர்கள் தரிசனையையும், அவர்கள் கையாலேயே கிர்க்காப் பெறும் பேற்றையும் பெற்றுக் கொண்டார்கள். கிடைத்தற்கரிய இம் மகா பாக்கியத்தால் ஷைகுல் அக்பரின் அகமிய ஞானமும் முதிரலாயிற்று. 'இஸ்முல் அஃலம்' என்ற மாபெரும் நாமம் அவர்களுக்கு விளங்கி விட்டது. அத்துடன் இரும்பைப் பொன்னாக்கும் கீமியாவும் அவர்களுக் இலகுவில் கைகூடிவிட்டது. இது நூற்கள் எதையும் படித்து உண்டான தேர்ச்சி அன்று. இறையருளால் உண்டான உதிப்புமூலம் இந்த அறிவு கிட்டிற்று என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

விலாயத்தெ-முஹம்மதியாவின் ஒலிகள் நாயகம்

ஷைகுல் அக்பர் அவர்கள் முஸ்லிம் ஸ்பெயினின் தலைநகரான குர்துபா (கார்தோவா)வில் தங்கியிருந்த சமயம் அடைந்த பெறற்கரும்

பேற்றை தங்கள் மகத்தான 'புத்தூஹாத்துல் மக்கியாவில்' விவரித்துள்ளார்கள். 'புஸூஸுல் ஹிக'மிலும் இதுபற்றி பிரஸ்தாபித்துள்ளார்கள். அது ஹிஜ்ரி 586-ம் (கி. பி. 1190-ம்) ஆண்டு. அவர்கள் குர்துபாவில் தங்கியிருக்கிறார்கள். அந்த இரவில் அவர்கள் கண்ட கனவுக் காட்சி அவர்களை மெய்சிலிர்க்க வைத்தது. நபி பெருமான் முஹம்மது (ஸல்) அவர்கள் அரியணையில் வீற்று இருக்கிறார்கள். ஆதம் (அலை) தொட்டு அனைத்து நபிமார்களும் அங்கே குழுமி இருக்கின்றனர். ஒலிமார்களும் அங்கே நிறைந்துள்ளனர். யாவரும் நபி பெருமானாரையே மரியாதையோடு நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கண்ணிய மிக்க மஜ்லிஸ் ஏன் கூட்டப்பட்டுள்ளது என்பதை அறிய அவாவுடன் பயபக்தியுடன் ஷைகுல் அக்பர் ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டு செல்கிறார்கள். கடைசியில் ஹூத் நபி (அலை) அவர்கள் தாம் இவர்களின் தவிப்பை உணர்ந்து இவர்களுக்கு உதவ முன்வருகிறார்கள். அழகில் சிறந்தவர்களாகவும், சிறந்த அறிவுத்திறன் படைத்தவர்களாகவும், இனிய பேச்சு உடையவர்களாகவும் விளங்கிய ஹூத் நபி (அலை) அவர்கள் ஷைகுல் அக்பரிடம் இரகசியமான குரலில்—சபையின் பெருமைக்கு குறைவு ஏற்படாவண்ணம்— கூறினார்கள்: "இந்தத் திருக்கூட்டம் உங்கள் பொருட்டால் தான் கூட்டப்பட்டுள்ளது. இங்கே இந்தச் திருச்சபை முன்னிலையில் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் 'விலாயத்தெ முஹம்மதிய்யா' வின் கடைசி ஒலியாக உங்களை நியமித்துள்ளதை பிரகடனம் செய்யப் போகிறார்கள்" என்று. ஷைகுல் அக்பருக்கு உள்ளம் புளகிதமடைந்தது;

அவர்கள் உடல் கிளுகிளுத்தது. நபிபெருமானார் தங்கள் திருவாயைத் திறந்து தங்களுடைய விலாயத்தெ முஹம்மதி என்னும் தெய்வ நேயத்தில் அவர்கள் கடைசி ஒலியாக நியமிக்கப் பட்டுள்ளதாக அறிவித்தார்கள்.

விண்மீன்களை மணந்த கனவு

இத்தகைய தனிப் பேறு பெற்ற ஷைகுல் அக்பர் முப்பது ஆண்டுகள்வரை முஸ்லிம் ஸ்பெயினில் கழித்துவிட்டு ஹிஜ்ரி 590 ல் (கி. பி. 1194) தூனிஸை நோக்கிக் கிளம்பினார்கள். பல்வேறு நகரங்களிலும் சுற்றிக் கொண்டு வந்தார்கள். ஹிஜ்ரி 595 ல் அவர்கள் மரியா என்னும் ஊரில் தங்கி இருந்த காலையில் தங்கள் பிரபலமான 'முவாக்கிஅத்துந் நுஜூம்' என்னும் விண்மீன்கள் பற்றிய விபரங்களை விளக்கும் நூலை எழுதினார்கள்.

ஹிஜ்ரி 597 ல் (கி. பி. 1200) சியூதாவை அடைந்தார்கள். அங்கே பிரபலமான அபூ அப்துல்லாஹ் அல் அரபி போன்ற பெரியார்களைச் சந்தித்தார்கள். ஷைகுல் அக்பர் எழுதுகிறார்கள்: "நான் சியூதாவில் இருந்த சமயம் ஒரு கனவு கண்டேன்: வானிலுள்ள நட்சத்திரங்களை எல்லாம் நான் மணந்து கொள்வதாக. அவற்றில் ஒரு நட்சத்திரம் கூட விடுபடாமல் யாவையும் அதிகமான ஆத்மீக இன்பத்தோடு நான் மணந்து கொண்டேன். பின்னர் சந்திரன்களை நான் மணந்து கொண்டேன்." இதை என் நண்பர் ஒருவரிடம் தெரிவித்தேன். அவர் கனவுக்குப் பலன் சொல்லக்கூடிய பிரபலமான மார்க்க அறிஞர் ஒருவரிடம் கலந்தார். அந்த அறிஞர் சொன்னார்,

'இக்கனவு கண்டவருக்கு எல்லையில்லா இறை யருள் வரப்போகிறது. மேலேயிருந்து ஞானம் இவர்மீது உதயமாகும். விண்மீன்கள் அனைத்து உடையவும் தனித் தன்மைகளும், ரகசியங்களும் இவருக்குத் தெரிந்திருக்கும். இவ் வகையில் இவருக்கு இக்காலத்தவரில் ஒப்புவமை கூறத் தக்கவர்களே யாரும் இருக்க முடியாது' என்று, அந்த அறிஞர் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, 'இக் கனவு கண்டவர் இப்போது இவ்வூரில் இருப்பாராயின், அவர் ஸ்பெயினிலிருந்து சமீ பத்தில் வந்துள்ள வாலிபராகத்தான் இருக்க வேண்டும்' என்றும் கூறினர்.

இந்த அறிஞரின் இவ் வாய்மொழியைக் கவனித்தால் ஷைகுல் அக்பருடைய புகழ் இப் போதே நெடுகிலும் பரவிவிட்டது என்பது தெளி வாகத் தெரிகிறதன்றோ! அவருடைய எழுத்து வன்மையும், அழகிய நடையும், மெய்ஞ்ஞான நாதர் என்ற முறையிலான ஒழுக்கமும், ஞானவிகா சிதமும் யாவரையும் இப்போதே கவர ஆரம்பித்து விட்டன.

ஷைகுல் அக்பர் ஞானத்திலும் வயதிலும் முதிர்ந்த மூதாட்டி ஒருவருக்குச் சேவை செய்யும் பேற்றையும் அடைந்தார்கள். பாத்திமா பிந்தி வலிய்யாஹ் என்ற அந்த தொண்ணூற்று ஐந்து வயது மூதாட்டி சிறந்த ஆரோக்கியத்துடனும், ஞான லயிப்புடனும் இருந்து வந்தார். காணும் பொருள் யாவிலும் இறைதரிசனத்தைப் பெறக் கூடிய தன்மையை அடைந்திருந்தார். 'ஸூரத்துல் பாத்திஹா'வை இவர் ஓதினல், அது

உடனே மனித உருப் பெற்று வந்து அவருடைய ஏவல்களை நிறைவேற்றும் சக்தி பெற்றிருந்தார் என்று ஷைகுல் அக்பர் தெரிவிக்கிறார்கள். இந்த மூதாட்டிக்குப் பணி செய்வதிலும், இவருடைய உபதேசங்களைக் கேட்பதிலும் ஷைகுல் அக்பர் பெரிதும் மகிழ்வு கண்டார்கள்.

எகிப்தில் தோன்றிய எதிர்ப்பு

ஹிஜ்ரி 598-ல் (கி. பி. 1201) ஷைகுல் அக்பர் அவர்கள் தூனீஸ் பகுதியை விட்டு வட ஆப்பிரிக்காவிலிருந்த பல்வேறு ஊர்களிலும் சுற்றுப் பயணம் செய்து எகிப்தை அடைந்தார்கள். அங்கே அவர்கள் புகழ் நெடுகிலும் பரவி ஏராளமானவர்கள் அவர்களை வந்து காணவும், அவர்களுடைய நல்லுபதேசங்களை அள்ளிப் பருகவும் முயலலாயினர். அவர்களோ ஒவ்வொரு ஊரிலும் இருந்த பெரியார்களுடைய அடக்க ஸ்தலங்களைத் தரிசிப்பதிலும், அவற்றில் சில இரவுகள் தங்குவதிலும், தியான மடங்களுக்குச் செல்வதிலும் அக்கறை காட்டினார்கள். இடையிடை தங்கள் எழுத்து வேலைகளிலும் விடாது ஈடுபட்டு வந்தார்கள்.

அவர்களுடைய எழுத்து வேலைகளிலும் பேச்சுகளிலும் வெளிப்பட்ட ஆத்ம ஞான அகமியங்கள் யாவரையும் பரவசப்படுத்தினவாயினும், மிக வக்கிரமான கண்டிப்புடன் அவற்றை நோக்கிய சிலரை ஆத்திரம் அடையவும் செய்தன. இத்தகையவர்களுள் இப்னுத் தைமிய்யா தலையானவர். மற்றும் அத் தப்தஜானி, இப்ராஹீம் பகாய் போன்றவர்களும் ஷைகுல் அக்பரை வன்மையாகக் கண்டிக்கலாயினர். மார்க்கச் சட்டம் என்ற போர்

வையுள் ஒளிந்திருந்துக் கொண்டு அவர்கள் மார்க்க அடிப்படைகளுக்கு முரணானவற்றை சொல்வதாகக் குற்றஞ் சாட்டினர். சமூகத்திலுள்ள ஆத்திரக்காரர்களைத் தூண்டிவிட்டு ஷைகுல் அக்பரை கொலை செய்யவே முயற்சியும் நடந்தது. ஆட்சியாளர்கள் தமது பக்கம் இருந்ததால் ஷைகுல் அக்பரைக் கைது செய்து சிறையில் அடைக்கச் செய்தனர். அவர்களுடைய ஆதரவாளர்களோ ஷைகுல் அக்பரை விடுதலை செய்தாகவே வேண்டும் என்று பெரிய கிளர்ச்சியே நடத்தினர். கடைசியில் ஆட்சியாளர்கள் அவர்களை விடுவித்து எகிப்தின் எல்லையை விட்டே உடனே அப்பாலாகிவிடும்படி உத்தரவிட்டு விட்டனர்.

சதுருத்தீன் சந்திப்பு

இந்தத் தருணத்தில்தான் ஷைகுல் அக்பர் அவர்கள் தங்கள் அபிமான சீடரான கோனியா ஷைகு சதுருத்தீனைச் சந்தித்தார்கள். குதிரை வீரர் ஒருவரும், கால்நடைப் பிரயாணி ஒருவரும் எதிர் எதிராய் வந்தனர். கால்நடைப் பிரயாணி குதிரை மீது வந்தவரை விளித்து, "எங்கிருந்து வருகிறீர்? எங்கே போவீர்? பாதையில் உமக்குக் கிடைத்தது என்ன?" என்று வினவினார். குதிரைமீது வந்தவர் பதிலளித்தார், "அறிவிலிருந்து, பொருளுக்கு வந்தேன் – இரண்டு லக்ஷியங்களையும் அடைவதற்காக" என்று. குதிரைமீது வந்தது ஷைகுல் அக்பர், கால்நடையாக வந்தவர்கள் ஸதுருத்தீன். இந்த முதல் சந்திப்புத் தொட்டு, ஸதுருத்தீன் ஷைகுல் அக்பருடைய இணைபிரியாச் சீடர் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய சீடர்கள் அனைவ

ரிலும் தலையானவர்கள் ஆகவும் விளங்கினார்கள். ஷைகுல் அக்பர் மறைவுக்குப் பின்னர் ஷைகு ஸதுருத்தீன் அவர்கள் கோனியா நகரில் அமர்ந்து தங்கள் குருநாதர் இயற்றிய 'புஸூஸுல் ஹிக'த்துக்கு ஞான விளக்கம் கொடுத்து வந்தார்கள். இந்த விளக்க உபன்னியாசத்தைக் கேட்கப் பல்லாயிரக் கணக்கானவர்கள் கூடுவதுண்டு. அக்காலையில் வாழ்ந்த மௌலானா ரூமியும் ஸதுருத்தீனின் இந்த விளக்கவுரைகளை வந்து அமர்ந்து கேட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

சமகால மகான்கள்

ஷைகு ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரவர்தி, நஜ்முத்தீன் ராஜி, முஸ்லிஹுத்தீன் ஸஅதி, அபுல் ஹஸன் ஷாதுலி, மௌலானா ரூமி, ஷெய்கு இப்னுல் பரீது ஆகிய மாமேதைகள் பலர் ஷைகுல் அக்பருடைய காலத்தவர்கள் ஆவர். ஹதீஸ் விளக்கம் கொடுத்துவந்த இப்னுல் ஜௌஸி அந்தப் பொறுப்பை இவர்களிடம் ஒப்படைத்ததாகவும் அறிகிறோம்.

இவர்களுடைய மாபெரும் கிரந்தமான 'புதூஹாத்துல் மக்கிய்யா' எழுதப்பட்ட பின், அரபியில் ஞானப் பாடல்களை எழுதிப் புகழ் பெற்ற ஷைகு இப்னுல் பரீதுக்கு இவர்கள் நிருபம் ஒன்று எழுதினார்கள். இப்னுல் பரீதின் 'தைய்யா' என்ற மெய்ஞ்ஞானப் பாடல்களுக்கு விளக்கம் எழுத அவர்களுடைய அனுமதியைக் கேட்டிருந்தார்கள். ''எனது தைய்யாவுக்கு உங்கள் 'புதூஹாத்துல் மக்கியா'வை விட வா வேறு விளக்கவுரை

கிடைக்கப் போகிறது? அதுவே மிகச் சிறந்த தாத்பரிய உரையாக விளங்குகிறதே!" என்று இப்னுல் பரீது பதிலளித்துவிட்டார்கள்.

ஷைகுல் அக்பரும், ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரவர்தியும் சந்தித்தபோது அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவர்களாக நீண்ட நேரம் அமர்ந்திருந்தனர். பின்னர் இருவரும் ஒருவார்த்தைகூடப் பேசாமல் பிரிந்து போய்விட்டனர். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ஷைகுல் அக்பரிடம் ஸுஹ்ரவர்தியைப் பற்றி அபிப்பிராயம் கேட்கப்பட்டபோது, "அவர்கள் தங்கள் கொம்பு முதல் குழம்புவரை எம்பெருமானாரின் ஸுன்னத்தால் நிறப்பப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்" என்று அவர்கள் பதில் அளித்தார்கள். இதுபோன்று ஸுஹ்ரவர்தியிடம் வினவப் பட்டபோது, "முஹியித்தீன் 'ஹகாயிரு' எனும் யதார்த்தக் கடலாக விளங்குகிறார்கள்" என்று பதில் அளித்தார்கள்.

பக்தாத், ஹிஜாஜ் பிரயாணம்

ஹிஜ்ரி 601-ல் ஷைகுல் அக்பர் பக்தாதை அடைந்தார்கள். அங்கே பன்னிரண்டு நாட்கள் தங்கி இருந்தார்கள். நமது ஆண்டகை முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) யின் அடக்க ஸ்தலத்தை ஒட்டிய தியான மடத்தில் இருந்தார்கள். அங்குள்ள ஸூபியாக்களின் தவநிலையும், ஒழுக்கமும் இவர்களைப் பெரிதும் கவர்ந்து விட்டன.

இக்காலையிலேயே ஷைகுல் அக்பரின் தவமும் அவர்கள் இதயத்தில் உண்டாகும் உதிப்புகளும், கனவுகளும் எங்கும் பிரபலமாகிவிட்டன. ஹிஜாஸிலும் ஸிரியாவிலுமே அவர்கள் தாம் அப்போது வாழ்ந்த ஞானியர் யாவரினும் தலையானவர்கள் என்று மதித்துப் போற்றப்பட்டார்கள். பன்னிரண்டு நாட்கள் மட்டும் பக்தாதில் தங்கிய பின் அவர்கள் மக்காவுக்குச் சென்று விட்டார்கள். புனித ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு, மதீனாவில் நபி பெருமானாரின் ரௌலா ஷரீபையும் தரிசித்தார்கள். மக்காவில் அவர்கள் அப்படியே ஏழு ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். அதன் பின்னர் ஹிஜ்ரி 608 (கி. பி. 1211)ல் அவர்கள் பக்தாத் திரும்பினார்கள். சில மாதங்கள் அங்கே தங்கி இருந்த பின் சிறிய ஆசியா முழுமையிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். மோஸுலுக்குச் சென்று விட்டு ஹிஜ்ரி 611 (கி. பி. 1214)ல் மக்காவுக்கே மீண்டும் சென்று விட்டார்கள்.

விண் முட்டிய புகழ்

இதற்கிடை அன்றைய முஸ்லிம் உலகம் முழுவதும் அவர்களுடைய புகழ் பரவி விட்டதால் பிரபலமான அறிஞர் பெருமக்களும், ஸூபியாக்களும் அவர்களைக் காணவும், அவர்கள் உபதேசங்களை அள்ளிப் பருகவும் கூட்டங் கூட்டமாக வரலாயினர். அவர்கள் தரும் அகமிய விளக்கங்கள் கேட்டுப் பரவசம் அடைந்தவர்கள் எண்ணற்றோர். அவர்கள் நல்லாசியை நாடி அவர்களை நெருங்கியவர்களும் ஏராளம்.

எந்த மர்மமான விஷயம் பற்றியும் அவர்கள் நூற்கள் எழுதத் துணிந்தது பலருடைய நன் மதிப்பைப் பெற்றளித்தது. அவர்களுடைய அகமிய ஞானப் பாடல்களைக் கண்டு பயபக்தி அடைந்தோர் பலர். திடுக்கிட வைக்கும் சமய உண்மைகளை யெல்லாம் அவர்கள் சாதாரண விஸ்வாசங்களில் இணைத்து வெளியிட்டது கண்டு வியப்படைந்தவர்கள் எண்ணற்றோர்.

அரசர், மந்திரிகள், செல்வர்கள், சாதாரண மக்கள்—இப்படிப் பலதரப்பட்டவர்களும் அவர்கள் சபையில் ஏராளமாக வந்து குழுமினர். அவரவர் களுடைய மன இயல்பையும், மனப் பிணியை—அல்லது ஒளியை—ஷைகுல் அக்பர் கண்டு கொண்டு அதற்கு ஏற்ற முறையில் அவர்களோடு, அவர் களுக்குப் பரிச்சயமான பாஷையில் பேசவும், பரிகாரம் நல்கவுமாக இருந்ததால் அவர்களை நாடி வந்தவர்கள் தங்கள் மனம் திருப்தியுற்றவர் களாகத் திரும்பினர்.

'புத்தூஹாத்'தை எழுதல்

மக்காவில் அவர்கள் தங்கியிருந்த காலையில் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றியபின் மிகப் பெரிய நூல் ஒன்றை எழுதவேண்டும் என்ற துணிச்சல் அவர்களிடம் உண்டாயிற்று. மக்காவின் புனிதமான சூழ்நிலையும், பவித்திரமான தன்மை யும், இதற்கு உறுதுணையாயின. இந்த நிலையில் அவர்கள் எழுதி முடித்த மாபெரும் கிரந்தம்தான் 'புத்தூஹாத்துல் மக்கிய்யா' (மக்காவில் உதிப்பான அகமியங்கள்) என்பதாகும். இந்த 'புத்தூஹாத்'தை மட்டும் தாங்கள் எழுதியிரா

விட்டால் தங்களை நெருப்பிலிட்டுக் கொளுத்தி இருப்பார்கள் என்று அதன் முன்னுரையில் அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் இதயத்தில் ஆக்கிரமித்திருந்த அகமிய உண்மைகளை எல்லாம் அவர்கள் இதில் அதி அற்புதமாக வெளியிட்டுள்ளார்கள்.

'தர்ஜுமா'னுக்கு விளக்கவுரை தந்தது

மக்காவில் அவர்கள் தங்கியிருந்த சமயம் கல்வி கேள்விகளில் சிறந்த பெண்மணி ஒருவர் அவர்களிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் காட்டி வந்தார். இப்போது ஷைகுல் அக்பர் அகமிய ஞானக் காதல் கருத்து அடங்கிய 'தர்ஜுமானுல் அஷ்வாக்' என்ற பாடல் தொகுப்பை எழுதினார்கள். அவற்றின் அகமியக் கருத்தை உணராதவர்கள் அவை பிரஸ்தாபப் பெண்மணியைப் போற்றி எழுதப்பட்டவைதாம், கேவலம் உடல் அழகை வருணிப்பவைதாம் என்று குறை கூறலாயினர். உடனே ஷைகுல் அக்பர் அவற்றின் அகமியக் கருத்துக்களை விளக்கி விரிவான விளக்கவுரையை எழுதி முடித்தார்கள். தாங்கள் எழுதிய பாடல்களில் காணப்பட்ட காதல் தாபம் இறைவனோடு தாங்கள் கொண்ட ஆசையே அன்றி வேறன்று என்பதை இதன் மூலம் விளக்கிய அவர்கள், தங்கள்மீது இழிவான குற்றச் சாட்டுகளை அவசரப்பட்டுச் சுமத்தியவர்கள் வெட்கப்படும்படி செய்து விட்டார்கள். (இது பற்றிய விபரங்களை அவர்களுடைய பாடல்களின் முன்னுரையிலிருந்து உரிய இடத்தில் எடுத்துச் சேர்த்துள்ளோம்.)

கொடையில் ஷெய்குல் அக்பரை மிகைத்த பெண்மணி

அவர்கள் மக்காவில் தங்கி இருக்கும்போது நடந்த சம்பவம் ஒன்றை அவர்கள் இவ்வாறு விவரித்துள்ளார்கள்: "மக்காவில் நான் இருந்த காலையில் என்னிடம் தெரிவிக்கப்பட்டது: பக்தாதில் இருந்து மக்கா வந்துள்ள பெண் ஒருத்தி என்னை மிகவும் போற்றிக் கொண்டாடுகிறார் என்று. அது பற்றி மகிழ்ச்சி அடைந்த நான் அவருக்கு ஏதாவது உதவி செய்ய நினைத்து நான் ரஜப் மாதம் முழுமையிலும் கஃபாவை தவாப் செய்ததன் - சுற்றிவந்ததன் - பயனை அந்த மாதுசிரோமணிக்கு அன்பளிப்பாக - ஹதியாவாகக் கொடுத்து விட்டேன். இதற்குச் சில நாட்களுக்குப்பின் நான் என் ஈச்சந் தோப்பில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் போது அங்கே புதிய மனிதர் ஒருவர் வந்தார். அவர் சொன்னார்: 'ஷைகுல் அக்பரே, நான் கனவு ஒன்று கண்டேன். அதில் பல ஒட்டகங்களின் மீது புனுகு, அம்பர், முத்து முதலியவை ஏற்றப் பட்டுப் போகின்றன. அவை ஷைகுல் அக்பர் உடையவை என்றும், அவற்றை அவர்கள் பக்தாதைச் சேர்ந்த இன்ன பெண்மணிக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்கள் என்றும் என்னிடம் சொல்லப்பட்டது.' இக்கனவைக் கூறிய மனிதர் அந்தப் பெண்மணியின் பெயரையும் சொன்னார். நான் கஃபாவின் தவாபை அந்தப் பெண்மணிக்கு அன்பளிப்புச் செய்தது யாருக்கும் தெரியாது. எனவே, இது கேட்டு வியப்படைந்த நான் உடனே அந்தப் பக்தாத் பெண்மணியை அழைத்துவரச் செய்தேன். நான் அவருக்கு கொடுத்தற்குப்

பகரமாக அவரிடம் சம்மானம் கேட்டேன். அந்தப் பெண்மணி சொன்னார்: "ஒரு சமயம் நான் கஃபாவின் வாயில் ஒன்றின் முன் அமர்ந்து இருந்தேன். அப்போது நீங்கள் கஃபாவைச் சுற்றிவந்து 'தவாபு' செய்து கொண்டிருந்தீர்கள். எனக்கு உங்கள்மீது பயபக்தி உண்டாகிவிட்டது. என் பக்கத்தில் இருந்த ஜனங்கள் அனைவரும் உங்களைப் போற்றிக் கொண்டாடிப் பேசினர். உடனே திங்கட்கிழமைகளிலும் வியாழக்கிழமை களிலும் நான் செய்துவந்த அமல்களின் சவாபை உங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டேன். வாரத்தில் இந்த இரண்டு நாட்களிலும் நான் நோன்பு பிடித்துத் தான தருமம் கொடுத்து வந்தேன்" என்று. இது கேட்டு ஷைகுல் அக்பர், "அந்தப் பெண்மணி எனக்குத் தந்துள்ளதைப் பார்த்தால், நான் அவருக்குக் கொடுத்துள்ளது அதில் நூறில் ஒரு பங்குகூட இருக்காது. இப்பெண்மணி தயாளத்தில் என்னை மிஞ்சி விட்டார்" என்று முடிவு கட்டினார்கள்.

மகாமெ-முஹம்மதின் தரிசனை

ஷைகுல் அக்பர் அவர்கள் கனவுகள் மூலம் பெரிதும் பயன் அடைந்துள்ளார்கள். அவர்கள் கண்டவை சாதாரணமான-ஒரு கனவு காண்பவன் உடைய-கனவுகள் அன்று. சூக்கும உலகின் ரகசியங்களையும் மறைவான விஷயங்களையும் அறிந்து கொள்ள உதவியவை அவர்கள் கண்ட கனவுகள். அவர்கள் நூற்கள் பலவற்றிலும் அவர்கள் நபி பெருமான் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு அவர்களோடு உரையாடிய விபரங்கள் பலவற்றின் தொகுப்பைக் காணலாம்.

நபிபெருமானாரைத் தத்தம் கனவுகளில் கண்ட பல பெரியார்களையும் இவற்றில் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ஷைகுல் அக்பருடைய ஓயாத தவயோகங்களும், கடுமையான வணக்கங்களும்தாம் இத்தகைய கனவுகளைக் காண உதவியுள்ளன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் தங்கள் 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வின் முன் உரையில் குறிப்பிடுகிறார்கள்: "நான் இந்த முன்னுரையை எழுதுகையில் திறை விலகல் மூலம் முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் கண்டேன். யதார்த்தமான கருத்துக்களின் உலகில் மாபெரும் சந்நிதியின் முன் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அங்கே தலைமையான இடத்தில் இருந்த அவர்கள் என்னைக் கண்டதும் என்னை வரவேற்று, "நம் இருவருக்கும் பொதுவான குணம் இதோ உள்ளது!" என்று அருளினார்கள். பின்னர் அந்தப் பயபக்தி நிறைந்த இடத்தில் மிம்பர் மேடை ஒன்று நிருவப்பட உத்தரவிடப்பட்டது. அந்த மிம்பர் மீது "இது மகாமெ முஹம்மது என்னும் முஹம்மதின் புனிதமான தலமாகும். இதில் ஏறுபவர் சத்தியத்தினதும் யதார்த்தத்தினதும் பொறுப்பாளராக ஆவதுடன் சன்மார்க்க நெறிமுறையின் (ஷரீஅத்தின்) பாதுகாவலர் ஆகவும் ஆகிவிடுவார்" என்று எழுதப்பட்டு இருந்தது. அந்த இடத்தில் சகல அறிவும் எனக்கு நல்கப்பட்டன; சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறனும் எனக்குத் தரப்பட்டது. நான் அல்லாஹுத் தஆலாவுக்கு நன்றி கூறியவனாக, அந்த மிம்பரின் மீது ஏறினேன். 'மகாமெ-

முஹம்மது' என்ற புனிதத் தலம்வரை ஏறினேன். நபி பெருமானார் திருப்பாதம் வைத்திருந்த இடத்தில் என் பாதம் படாதபடி வெண்ணிறத் துணிகள் பல விரிக்கப்பட்டிருந்தன." இதன் பின்னர் நபி பெருமானாருக்கும் தங்களுக்கும் இடையில் நடந்த உரையாடல்களை ஷைகுல் அக்பர் விரிவாகத் தருகிறார்கள்.

அமரர் காட்டித்தந்த அகமிய அறிவு

ஒரு சமயம் ஷைகுல் அக்பர் கஃபத்துல்லாஹ்வைச் சுற்றிவந்து கொண்டிருந்தார்கள். அங்கே அமரர் ஒருவர் வாலிபரின் வடிவில் அதே தவாபை நகழ்த்திக் கொண்டிருந்தார். அவர் அந்தக் கஃபாவின் உள்ளேயிருந்த உயிருள்ள யதார்த்தமான கஃபத்துல்லாஹ்வைச் சுட்டிக்காட்டினார். தெய்வீகக் கருத்துக்கள் வெளிப்படையான சமயக் கோட்பாடுகளால் பொதியப்பட்டிருப்பது போன்ற நிலையில் ஷைகுல் அக்பர் அந்த அகமியக் கஃபாவைக் கண்ணுற்றார்கள். இதைக் கண்ணுற மகத்தான இதயத்தின் திரைகள் அகல வேண்டும். அது சாதாரண மனிதக் கண்களால் காண இயலாததும் கூட. ஷைகுல் அக்பர் உடனே மயக்கமாகி விழுந்து விட்டார்கள். அவர்கள் உணர்வு பெற்ற போது அவர்கள் கண்ட அகமியப் படிவத்தில் கருத்தை ஊன்றுமாறும், அவர்கள் பார்வைக்குத் திரையகற்றிக் காட்டும் மர்மங்களை எழுதும்படியும் அந்த அமரர் ஷைகுல் அக்பரிடம் கூறினார். பின்னர் வாலிபர் உருவில் இருந்த அந்த அமரர் ஷைகுல் அக்பரைக் கஃபாவுக்குள் அழைத்தேகினார். அங்கே அவர்களுக்கு அவர் மூன்று கால்கள் உடைய பரியின் உருவில் காட்சியானார். அத்துடன் அவர்

இவர்கள் இதயத்தில் சகல பொருள்களுடைய அந்தரங்க அறிவையும் ஊதினார். சகல அகமியங்களும் பொதிந்துவைக்கப்பட்டுள்ள தெய்வீகமான படிவத்தை விவரிக்கும்படி உத்தரவிட்டார்.

'புத்தூஹாத்துல் மக்கியா'வின் (மக்காவில் உதிப்பாக்கித் தரப்பட்ட அகமிய உதிப்புகளின்) மூலம் இதுதான். இந்தப் பாணியிலேயே அதன் பெரும் பகுதியும் எழுதப்பட்டுள்ளது. இந்த நூலில் உள்ள ஒவ்வொரு வார்த்தையுமே தங்களுக்கு மறைவான தலத்திலிருந்து அறிவிக்கப்பட்டவைதாம் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பல தடவை 'ஹஜ்'ஜை நிறைவேற்றியுள்ள ஷைகுல் அக்பர் அவர்கள், ஹஜ்ஜின் அகமியத்தை இவ்வாறு விளக்குகிறார்கள்: "ஹஜ்ஜு தங்கள் மீது கடமை என்று உணர்வோருக்கு அதை நிறைவேற்றுதல் கடமையாகும். இஹ்ராம் தற்காலிகமாக உங்களைப் பாவத்தைவிட்டும் விலக்கி வைக்கிறது. எனவே, உங்கள் வாழ்நாள் முழுவதும் இஹ்ராமிலேயே இருப்பதாக உங்களைக் கருதும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் பாவத்தைவிட்டுக் கார்மானம் பெறலாம்... என் அன்பானவனின் (வட்டமான) காலணியின் மீதும், மோதிரத்தின் மீதும் நான் மஸ்துக் கொண்டு விட்டேன். எனவே, நான் கஃபாவை வட்டமிட்டுச் சுற்றிவருகிறேன். நான் ஷைத்தான் மீது கல்லெறிகையில் என் அகத்துள் இருந்து என்னை மயக்கிப் பாவத்தில் ஈடுபடத்

தூண்டும் ஷைத்தானை அதனால் அடிக்கிறேன்.
மினாவில் 'குர்பானி' கொடுக்கும்போது, நான் என்
தீய எண்ணங்களையே குர்பானி கொடுக்கிறேன்."

அவர்களுடைய தெய்வ மஸ்துப்

பாடல் ஒன்று

ஷைகுல் அக்பர் இறைவனைத் தங்கள் காதலியாகக் கருதிப் பாடல்கள் பல எழுதியுள்ளார்கள். "இறைவனை ஜடதத்துவமின்றிக் காண இயலாது; பெண்ணில் அவனைக் காண்பது யாவிலும் பூரணமான காட்சியாகும்" என்று அவர்கள் தங்கள் 'புஸூஸுல் ஹிக'மில் கூறுகிறார்கள். இவ்வாறு வருணிக்கும் அழகிய பாடல்களில் ஒன்றின் கருத்து வருமாறு:

அவள் வதனத்தை நான் காண
இயலாவிடினும்,
அவளைப் பற்றி என் ஆத்மா பெரிதும்
கவலையுற்றுள்ளது.
அவள் வதனத்தை நான் காண
இயலுமெனின்,
அவளுடைய கறிய புருவங்களால்
கொல்லப்பட்டிருப்பேன்.
என் பார்வை அவள்மீது விழுந்ததும்,
நான் என் பார்வைக்கு அடிமையானேன்;
அவளால் மஸ்தடைந்தவனாய்
இரவில் உழன்றேன்;
பொழுது புலர்ந்தும் கூட என் பிதற்றல்
நிற்கவில்லை;
அந்தோ, என் உயரிய லக்ஷியங்களே!
உயரிய முடிவுகள் அந்த மயக்குபவளின்

அழகை அடைய
உதவியிருக்குமேல்,
நான் இத்துணை வழிகெட்டுப்
போயிருக்கமாட்டேன்.
மான்குட்டி போன்ற நளினத்துடன்,
புல்வெளியில் உலவும்
அவள் நிலையும், பாதி திரும்பிய
பார்வையும்
மனித இதயங்களைச்
சிறைப்பிடிப்பவை ஆகும்.
அவள் மூச்சு இனிய புனுகு போன்ற
நறுமணத்தால் பேரின்பம் நல்குகிறது.
நண்பகல் பகலவன் போல் அவள்
ஒளி சிந்துகிருள்.
முழுமதியின் தண்மையும்
அவளிடம் நிலவுகிறது.
அவள் தோற்றமானுல்,
காலையின் ஜாஜ்வல்யமே தோற்றமாகிறது;
அவள் கேசம் அவிழ்க்கப்படின்
இருண்ட இரவுபோன்ற அந்தக் கூந்தலால்
முழுமதியே மறைந்து போய்விடுகிறது.
மதிவதனியே, என் இதயத்தை
வேண்டுமாயினும் எடுத்துச்செல்;
ஆனுல், என் கண்களை மட்டும்
என்னிடம் விட்டுவை-
அவற்ருல் நான் உன்னைப்
பார்த்துக்கொண்டே இருக்க.
என் இன்பம் முழுமையும்
என் பார்வையிலேயே உள்ளது.

யாசகனுக்கு வீடு தானம்

ஹிஜ்ரி 611 (கி. பி. 1214—15)ல் ஷைகுல் அக்பர் மக்காவிலிருந்து புறப்பட்டு மறு ஆண்டில் ஹலபு வந்து அடைந்தார்கள். சிறிய ஆசியாவின் கிறிஸ்தவ அமீர் அவர்களை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். அவர்களுக்குப் பெரிய மாளிகை போன்ற வீடு ஒன்றையே ஆயத்தம் செய்து அதில் தேவையான சகல பொருள்களையும் வைத்து அதை அவர்களுக்கே கொடுத்தார். இங்கே இருந்துகொண்டு ஷைகுல் அக்பர் சிறிய ஆசியாவின் பல்வேறு இடங்களுக்கும் சென்று வந்தார்கள். சென்ற இடங்களில் எல்லாம் ஏராளமானவர்கள் அவர்களுடைய சீடர்கள் ஆயினர். அவர்கள் புகழ் உச்சத்தை எட்டிவிட்டது. செல்வர்கள் போட்டியிட்டுக் கொண்டு வந்து அவர்களை உபசரித்தனர்.

செல்வத்தைப் பற்றிய அக்கறை அவர்களிடம் இருக்கவில்லை. எனவே, வருவதில் தங்கள் தேவைக்கு வேண்டியது தவிர மற்றதை இறைவன் பெயரால் ஏழைகளுக்குக் கொடுத்து விடுவார்கள். செல்வம் என்பது சரியானபடி பயன்படுத்தப்படின் அது நமக்கு இறைவனின் நல்லன்பைப் பெற்றுத் தருவதாகும் என்பது அவர்களுடைய கருத்து. எனவே, கையில் இருப்பது எதுவாயினும் அதை சற்றும் யோசியாமல் இரப்போர்க்குக் கொடுக்கும் வள்ளன்மை அவர்கள் குருதியில் குடிகொண்டிருந்தது. தங்கள் முதாதையான ஹாத்திம் தாயியின் அன்போடு அள்ளி வழங்கும் பண்பை எண்பிக்கும் சம்பவம் ஒன்று இங்கே விவரிக்கத்தக்கதாகும்.

கிறிஸ்தவ அமீரால் ஹலபுவில் தங்களுக்குத் தரப்பட்ட மாளிகை போன்ற வீட்டில் அவர்கள் அமர்ந்து நூல் எழுதிக்கொண்டிருந்தார்கள். அப்போது பிச்சை எடுப்பவன் ஒருவன் வந்தான். ஏதாவது தந்து உதவும்படி மிகவும் பணிவோடு வேண்டினான். "என்னிடம் தற்சமயம் கையில் பொருள் எதுமில்லையே அப்பா! நான் இருக்கும் இந்த மாளிகை மட்டும்தானே என் பொருளாய் இருக்கிறது" என்று ஷைகுல் அக்பர் கூறினார்கள்.

இரப்பவன் விளையாட்டாகவே, "அதையாவது நீங்கள் எனக்குத் தந்தால் என்ன?'' என்று கேட்டுவிட்டான். "இந்த வீட்டைத்தானே, இதோ தந்துவிட்டேன். இந்தக் கணத்திலிருந்து இது உன்னுடையது தான். உடனேயே ஒப்புக் கொள்" என்று அந்த ஏழையிடம் அந்த வீட்டை ஒப்படைத்துவிட்டு வெளியேறி விட்டார்கள்.

இத்தகைய தயாளத்தாலும், அன்பாலும் அவர்களிடம் அன்பும் மதிப்பும் பாராட்டியவர்கள் பலர். அவர்கள்மீது பகைமை பாராட்டியவர்கள் இதனால் அவர்களை நெருங்க இயலாது போய் விட்டது. அவர்களுடைய பயபக்தியும், ஏழ்மை யான வாழ்வும், கடல் போன்ற அறிவும், கண்டதுமே மரியாதை கொள்ளச் செய்யும் தோற்றமும் அவர்களுடைய பகைவர்களையும் அவர்களை விட்டு அப்பால் விரட்டியடித்து விட்டன.

தமாஸ்கஸில் தங்குதல்

ஷைகுல் அக்பர் ஒவ்வொரு ஊராகச் சுற்றிக் கொண்டே, கடைசிவரை தங்க வசதியான இடம்

ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் தமாஸ்கஸ் நகரிலேயே தங்குவது என்று முடிவு செய்து அங்கேயே இருந்து விட்டார்கள். இந்த நகரத்தின் பிரதம காதியாரான ஷம்சுத்தீன் அஹ்மதுல் குலை அவர்களுக்கு ஓர் அடிமை போல் சேவை செய்தார். அவர்களுடைய நூற்களைப் பிரதிகள் எடுத்து எழுத எழுத்து வல்லமை மிக்க பலர் இலவசமாக எழுதித்தரப் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர். எனவே, யாவரும் அங்கே அவற்றைப் படிக்கும் வாய்ப்பும் கிட்டிற்று. தமாஸ்களில் அவர்களுக்கு எதிர்ப்பும் கடுமையாக இருக்கவில்லை. அவர்களைப் பிடிக்காத சிலருக்கும் அவர்களை எதிர்த்து எதுவும் செய்யும் அளவுக்குப் பலம் இருக்கவில்லை. தமாஸ்கஸ் நகரில் மாலிக்கி மத்ஹபினர் செல்வாக்குடன் விளங்கினர். இந்த மாலிக்கி மத்ஹபின் தலைமைக் காதியார் தமது திருப் புதல்வியையே ஷைகுல் அக்பருக்கு மணம் முடித்துக் கொடுத்து விட்டார். அக்காலையில் காதியார் என்பவர் தம் தீர்ப்பை எதிர் நோக்கிய மக்களிடை முடிசூடா மன்னனாக விளங்கியவர் என்பதை எண்ணிப்பார்த்தால் ஷைகுல் அக்பர் அவர்களுக்குச் செய்யப்பட்ட மரியாதையின் தன்மை விளங்கலாகும்.

தமாஸ்களில் அவர்களுக்கு கிடைத்த மரியாதையுடன், ஏராளமானவர்கள் அன்பளிப்புகளையும் அனுப்பிக் கொண்டிருந்தனர். ஹெம்ஸ் நகர அமீர் அவர்களுக்குத் தினமும் நூறு திர்ஹம் அன்பளிப்பாக அனுப்பிக் கொண்டிருந்தார்; இப்னுல் அஸ்கி என்ற செல்வர் தினமும் முப்பது திர்ஹம் அனுப்பினார். தங்கள் குடும்ப

சம்ரக்ஷணைக்கு வேண்டியதையன்றி மற்றவற்றை அவர்கள் ஏழைகளிடை வினியோகித்து விட்டார்கள்.

தூஷித்தவர்களிடம் காட்டிய தயாளம்

ஷைகுல் அக்பர் அவர்கள் . தமாஸ்கஸில் பிற்காலத்தில் பெரிய அளவில் இரண்டு கடைகளை நடத்திவந்ததாகவும் சொல்லப்படுகிறது. ரத்தினக் கடை ஒன்றையும், பட்டு ஜவுளிக் கடை ஒன்றையும் நடத்தினார்களாம். இந்தக் கடைகளோடு சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பலவும் சொல்லப்படுகின்றன. அவற்றுள் இரண்டு விதமான அம்சங்களை வெளியாக்கும் இரண்டு சம்பவங்களை மட்டும் குறிப்பிடலாம்.

ஒன்றில், தங்களைத் தூஷித்தவர்களிடமே வள்ளன்மையோடு நடந்து கொண்ட அவர்கள் குணம் வெளிப்படுகிறது. வெளியூர் ஒன்றில் இருந்து முதியவர் ஒருவர் அவர்களைத் தேடி வந்தார். அவர் மார்க்கக் கல்வியில் நிபுணர். அவர் தாமும், தமது தோழர்களான அறிஞர்கள் சிலரோடு சேர்ந்து ஷைகுல் அக்பருடைய ஆத்மஞான போதனைகளை வன்மையாகக் கண்டித்தவர். இப்போது அவரும், அவருடைய தோழர்களும் கடுமையான வறுமையால் பீடிக்கப்பட்டு இருந்தனர். எனவே, இந்த முதிய அறிஞர் தமது சார்பாகவும், தமது தோழர்கள் சார்பாகவும் ஷைகுல் அக்பரைக் கண்டு உதவி கேட்டுப் பார்க்க தமாஸ்கஸ் வந்தார்.

அவர் அவர்களுடைய ரத்தினக் கடையுள் முதலில் நுழைந்தார். அங்கே குவிந்திருந்த ரத்தினங்களையும், வைரங்களையும் கண்டு அவர் திகிலடைந்து விட்டார். வர்த்தக காரியங்களைக் கவனிக்கும் பலர் அங்கிருந்தனர். அவர்கள் தத்தம் வேலைகளில் பராக்காய் இருந்தனர், அவர் ஷைகுல் அக்பரை அதற்கு முன் நேரில் கண்டவரல்லர். எனவே, அவர்களில் ஒருவரை நெருங்கி கடை முதலாளியான ஷைகுல் அக்பர் யார் என்று கேட்க எண்ணினார். ஆனால், அச்சமயம் 'லுஹர்' தொழுகைக்கான பாங்கு ஒலி எழுந்துவிட்டது. அவ்வளவுதான், அனைவரும் அப்படியே போட்டது போட்டாற்போல் அங்கு இருந்து கிளம்பித் தொழுகைக்குப் போய்விட்டனர். வந்த முதியவர் கூர்ந்து பார்த்தார். பல கோடி பெறுமானமுள்ள ரத்தினங்கள் அப்படியே கிடக்கின்றன. யாரும் இல்லை. 'இவற்றில் சிலவற்றை எடுத்தால் யாருக்கும் தெரியாது' என்று எண்ணியவராகச் சில ரத்தினக் கற்களை எடுத்துத் தமது மேல் துண்டில் முடியப் போனார். அப்போது, 'நாம் இத்துணை மார்க்கக் கல்வி பயின்றுவிட்டு இப்படி பிறர் பொருளைக் களவெடுக்கலாமா?' என்று அவர் உள்மனம் அவரைக் கண்டித்தது. உடனே அவசரமாக அவற்றைப் போட்டுவிட்டு அவரும் தொழுகையை நாடிப் போய்விட்டார்.

பிற்பகலில் அந்த முதிய அறிஞர் ஷைகுல் அக்பர் நடத்திய பட்டு ஜவுளிக் கடையுள் நுழைந்தார். அங்கும் பல லக்ஷக்கணக்கில் மதிப்புள்ள பட்டுத் துணிகள் குவிந்திருப்பதையும், பலர் நின்று வர்த்தகத்தைக் கவனிப்பதையும் கண்டு திகைத்து

விட்டார். அவர்களுள் ஒருவரை அணுகி இந்தக் கடை முதலாளியான ஷைகுல் அச்பர் யார் என்று வினவினார். மூலை ஒன்றில் ஸூஃபியாக்கள் அணியும் முரட்டுக் கம்பளி உடையுடன் எழுதும் பலகைமுன் அமர்ந்து தமது வேலையில் கவனமாய் இருந்த ஒருவரை அவர் மரியாதையுடன் சுட்டிக்காட்டினார். முதியவருக்கு இது மேலும் பெரிய அதிர்ச்சி. இத்துணை பெரிய வர்த்தகங்களை நடத்தும் அதிபர் இவ்வாறு எளிமையுடன் இருப்பார், ஒரு மூலையில் அமர்ந்திருப்பார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் அவர்கள் முன் சென்று ஸலாம் சொன்னார். பதில் சொன்ன ஷைகுல் அக்பர் அவரை அருகில் அமர வைத்தார்கள். அவர் தமக்கும், தமது வறிய தோழர்களுக்கும் உதவி கேட்டு எழுதப்பட்ட நிருபத்தை அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் படித்துப் பார்த்தார்கள். தங்களுடைய மெய்ஞ் ஞானக் கருத்துக்களைத் தாக்கிப் பேசியவர்களே தங்களிடம் உதவி கேட்டு வந்துள்ளனர் என்பது பற்றி புன்னகை செய்துகொண்டு ஒரு துணிப் பொட்டலம் நிறைய வைரம் - வைடூரியங்களை வைத்துக் கட்டச் செய்து அவரிடம் கொடுத் தார்கள். மகிழ்ச்சியோடு பல ஆயிரம் பெறுமான அந்த அன்பளிப்பைப் பெற்றுக் கொண்ட அவர் கேட்டார், "உங்கள் கடைகளில் கண்காணிப்புப் போதாதே! தொழுகை நேரத்தில் யாவையும் போட்டது போட்டாற் போல் போவது நலமே. அதே சமயம் அவற்றைப் பத்திரமாகப் பூட்டிவிட்டுப் போகச் சொல்வது நல்லதல்லவா!" என்று.

ஷைகுல் அக்பர் புன்னகையுடன் பதில் அளித்தார்கள்: பூட்டுவதில்லை; கண்காணிக்கும்

பொறுப்பை நாங்கள் அல்லாஹ்விடமே விட்டு விடுகிறோம். உதாரணமாக, இன்று பகல் நீங்கள் சில ரத்தினங்களை எடுத்துத் துணியில் முடியப் போனீர்கள். ஆனால், அப்போது அல்லாஹுத் தஆலா உங்கள் மனத்தை மாற்றி மீண்டும் அவற்றை அங்கேயே வைக்கச் செய்யவில்லையா!''

அந்த முதியவர் அதுவரை தாம் அனுபவித்த அதிர்ச்சிகளை எல்லாம் மிகைத்த மகத்தான அதிர்ச்சிக்கு ஆளானார். அதிலிருந்து மீளவே அவருக்குச் சற்று அவகாசம் தேவைப்பட்டது. ''ஷைகுல் அக்பர் அவர்களே, உங்கள் மகத்துவம் தெரியாமல் நாங்கள் செய்த அபச்சாரத்தைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டு அவர் தமது ஊருக்குப் புறப்பட்டார். அவர் செல்வதற்கான கோவேறு கழுதை ஒன்றையும் அவருக்கு அன்பளிப்பாக நல்கி அவரை அவர்கள் வழி அனுப்பி வைத்தார்கள்.

பணம் பெட்டியில்தான்-மனத்துள் அல்ல

இன்னொரு சம்பவம் வருமாறு: ஷைகுல் அக்பரின் இந்த வர்த்தகங்களையும், அவர்களுடைய நூல் பெருமையையும் பற்றி கேள்விப்பட்ட வெளியூர் ஆலிம் ஒருவர், ''இத்துணை பெரிய ஞான உபதேசகர் எப்படி இப்படிப் பட்டு-ரத்தினம் முதலிய வர்த்தகங்களை நடத்தலாம், ஒருக்கால் இவர் எழுத்துக்கள் வெறும் போலியாக இருக்கலாமோ, பணத்து ஆசை இல்லாவிட்டால் இவர் இப்படிக் கடை வைத்து நடத்துவானேன்? எதற்கும் நாம் நேரில் சென்று கண்டு வருவோம்'' என்று புறப்பட்டு தமாஸ்கஸ் வந்தார்.

இவர் வந்தது நண்பகல் நேரம். ஷைகுல் அக்பர் தங்கள் ரத்தினக் கடையில் அமர்ந்து விற்று முதலான பணத்தை எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அந்தப் பணத்தில் அவர்கள் கை புரள்வதைக் கண்ட இந்த மனிதர் அவர்கள்மீது தாம் கொண்ட சந்தேகத்தை உறுதிப் படுத்திக் கொண்டார். தங்களைக் காண வந்த அந்த மனிதருக்கு உபசாரம் செய்து சற்று நேரம் கடையில் இருக்குமாறு பணித்த ஷைகுல் அக்பர் தங்கள் மொத்த தொகையையும் எண்ணி முடிப்பதில் கருத்தாய் இருந்தார்கள். ஆனால், அவரோ அவர்களைப் பற்றிய கீழான எண்ணங்களில் தமது மனத்தை ஓடவிட்டுக் கொண்டிருந்தார். இதற்கிடை 'லுஹர்' நேரம் வந்து பாங்கு சொல்லும் சப்தம் கேட்கவே, பணத்தை அப்படியே பெட்டியில் வைத்துப் பெட்டியை அடைத்துவிட்டு, "வாருங்கள், தொழச் சொல்வோம்" என்று வந்த விருந்தினரையும் அழைத்துக் கொண்டு அவர்கள் மஸ்ஜிதுக்கு வந்து விட்டார்கள். அங்கே ஷைகுல் அக்பர் இமாமத் செய்து தொழவைக்க பின்னால் நின்று தொழுத ஜமாஅத்தில் இந்த மனிதரும் சேர்ந்து கொண்டார். இதற்கிடை இவர் கையில் கொணர்ந்த கைத்தடி ஒன்றை ஹவுளின் அருகாக ஒலுச் செய்யும் இடத்தில் வைத்துவிட்டு வந்து விட்டார். அது இந்த மனிதருக்கு இப்போது தான் நினைவுக்கு வந்தது. அதில் வெள்ளிப் பூண் வேறு கட்டியிருந்தது. எனவே, அது ஐந்து திர்ஹமாவது பெறும், அதை யாரும் தூக்கிப்போய் விடுமுன் எடுத்துவிட்டால் நலம் என்ற எண்ணமும் உண்டாயிற்று. ஐந்து திர்ஹம் மதிப்புள்ள ஒரு பொருளைக் காப்பாற்ற தமது தக்பீரை

விட்டுச்சென்று அதை எடுத்துக் கொண்டு வந்து மீண்டும் 'தக்பீர்' கட்டிக் கொள்ளலாம் என்று அவருடைய 'பிக்ஹு' ஞான வன்மை அவருக்கு அறிவித்தது. எனினும், இதற்கிடை தொழுகை நடந்து கொண்டிருந்ததால் அதில் பராக்காகி விட்டார்.

தொழுகை முடிந்து மஸ்ஜிதிலிருந்து வெளியில் வந்து பார்த்தால் அவருடைய கைத்தடி நல்ல வேளையாக அவர் வைத்த இடத்திலேயே இருந்தது. மன நிம்மதியோடு அதை அவர் எடுத்துக் கொண்டார். இதற்கிடை ஷைகுல் அக்பரும் தங்கள் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியில் வந்துவிட்டார்கள். விருந்தினரைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். உணவு வகைகள் பரப்பப்பட்டிருந்த உணவு விரிப்புமுன் அவரை அமர்த்தினார்கள். உணவு வகைகளைக் கண்டு அவர் அப்படியே மலைத்துப் போய்விட்டார். "இத்தனை சொகுசான வர்த்தகம் நடத்தி இத்தனை சொகுசான உணவு உண்ணும் இவருடைய துறவு என்ன துறவு!" என்று ஓர் எண்ணம். இதற்கிடை சிறிய பாத்திரம் ஒன்றில் கோதுமை நொய்க் கஞ்சியும், அதற்குத் தொட்டுக் கொள்ளச் சட்னியும் வந்தன. அவை ஷைகுல் அக்பர்முன் வைக்கப்பட்டன. அதைக் கண்டதும் வந்தவர் மனத்தில் ஒரு குழப்பம்.

ஷைகுல் அக்பர் சொகுசான உணவுகளை அவருக்குப் பறிமாறிக் கொண்டே தாங்கள் கோதுமைக் கஞ்சியைக் குடிக்கலானார்கள். அவர்கள் சொன்னார்கள் : "நீங்கள் என்னைச் சோதிக்க வந்ததெல்லாம் சரிதான். நான்கு பெயருக்கு அதிகமாகப் பயன்படட்டும் என்று என் எழுத்

துக்குப் போக மீதமுள்ள நேரங்களில் இப்படி கடைகளை நடத்தி வருகிறேன். ஆனால், அவற்றில் உள்ள டாலடிக்கும் ரத்தினங்களிலோ, பள பளக்கும் பட்டுகளிலோ, பணப் பெட்டியில் குவியும் திர்ஹம்-தீனார்களிலோ என் மனம் மயங்குவது இல்லை. அவை நிலையற்றவை என்று நன்கு அறிந்து, அவற்றில் எந்த ஒட்டுதலும் இன்றி நான் பழகுகிறேன். தொழுகைக்கு பாங்கு சொல்லத் தொடங்கியதும் கையிலிருந்த பணத்தை எல்லாம் பெட்டியுள் போட்டு விட்டேன். அப்போது பணம் பெட்டியுள்தான் இருந்ததே அன்றி என் மனத்தில் இல்லை.

"ஆனால், எனக்குப் பின்னால் நின்று தொழுதவர் களில் நீங்களும் ஒருவர். நீங்களோ அந்தக் கைத் தடியை ஹவுளு அருகில் வைத்துவிட்டு வந்த நினைவாய், வெள்ளிப் பூண் கட்டியதாயிற்றே தக்பீரையே விட்டு விட்டு அதைப் போய் எடுத்து வந்து பின் தக்பீர் கட்டிக் கொள்ளலாமா என்று குழம்பிக் கொண்டிருந்தீர்கள். ஆனால், ஆயிரக் கணக்கில் செல்வத்திலும், பணத்திலும் புரண் டாலும் என் மனம் அதில் படிவதில்லை. அவற்றை நான் பெட்டியுள்தான் வைத்தேனேயன்றி, என் மனத்துள் வைக்கவில்லை. இது போல், எளிய உணவையே நான் பெரும்பாலும் உட்கொள் கிறேன், உணவே இல்லாது பட்டினி கிடந்தும், பல சமயங்களில் ஹவுளுத் தண்ணீரைக் குடித்தும், கபுர்களிலும், இறந்தவர்களைத் தூக்கப் பள்ளிகளில் இருக்கும் சந்தூக்கிலும் படுத்து உறங்கியும் பழக்கப் பட்ட உடல் இது. சாப்பிடுங்கள்" என்று ஷைகுல் அக்பர் கூறினார்கள்.

அவர்களைச் சோதிக்க வந்த அந்த மனிதர் கண்ணீர் பெருக, "இந்த யுகத்தின் மகான் அவர்களே, நான் செய்த அபச்சாரத்தை மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

தங்களைத் திட்டியவன் மன்னிக்கப்பட உண்ணாநோன்பு

தமாஸ்கஸில் ஒருவன் ஷைகுல் அக்பரைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டிருந்தான். தினமும் பத்துத் தடவையாவது அவர்களைத் திட்டிவிடுவான். ஒரு நாள் திடீரென்று அவன் இறந்து போனான். அவன் ஜனாஸாவை நல்லடக்கம் செய்ய ஷைகுல் அக்பரும் சென்று இருந்தார்கள். அங்கிருந்து திரும்பியதும் கஃபத்துல்லாஹ்வை நோக்கித் திரும்பியவர்களாக அவர்கள் அமர்ந்து விட்டார்கள். காலை உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதை அவர்கள் திரும்பியும் பார்க்கவில்லை. பகலுணவு நேரம் வந்தும் அவர்கள் மிகவும் கவலையான தோற்றத்துடன் அமர்ந்தே இருந்தார்கள். கடைசியில் இரவு சாப்பாட்டு நேரமும் வந்தது. உடனே அவர்கள் மகிழ்ச்சியோடு பணியாளை அழைத்துத் தங்கள் இரவு உணவைக் கொண்டுவரும்படி பணித்தார்கள். இதுபற்றி வினவப்பட்டபோது சொன்னார்கள், "என்னை அவதூறாகப் பேசிய அந்த மனிதன் மன்னிக்கப்படும் வரை நான் உணவு உண்ணவோ, தண்ணீர் அருந்தவோ மாட்டேன் என்று இறைவனிடம் தெரிவித்து விட்டேன். 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை எழுபதினாயிரம் தடவைகள் ஓதினேன். அப்போதுதான் அல்லாஹ் அவனை மன்னித்தான்."

தங்களிடம் பகைமை பாராட்டியவர்களிடம் எத்துணை அன்போடும் கருணையோடும் ஷைகுல் அக்பர் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மேலே நாம் கண்ட மூன்று சம்பவங்களும் எத்துணை அருமையாக விவரிக்கின்றன! கடைசி சம்பவத்தில் தங்களைத் தூஷித்தவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் வரை உணவே உண்ணாமல் கலிமாவை எழுபதினாயிரம் தடவை ஓதிய அவர்களுடைய மாட்சியை எண்ணிப் பாருங்கள். காமிலான ஞான நாதரின் குண நலன் பற்றி அவர்கள் வருணித்துள்ள கீழ்க்காணும் அவர்கள் வாய்மொழி அவர்களுக்கே எத்துணை அருமையாகப் பொருந்துகிறது என்பது எண்ணிச் சிந்திக்கத்தக்கது. அவர்கள் அருளியுள்ளார்கள்: "சம்பூரண மனிதர் எனப்படுபவரின் குணபாவம் யாதெனின், அவர் இறைவனுடைய இயல்பையும் தன்மையையும் அறியாதவர்களாய்த் தம்மோடு பகைமை பாராட்டுபவர்களிடம்—தங்கள் அறியாமை காரணமாக அவரைத் தங்கள் பகைவர் என்று கூறுபவர்களிடம் எப்பொழுதும் தயாளத்துடன் நடந்து கொள்வதேயாகும்."

மறைவு

ஷைகுல் அக்பர் முஹியித்தீன் இப்னுல் அரபி அவர்கள் புகழேணியின் உச்சத்தில் இருக்கும் போது, இஸ்லாமிய உலகம் முழுவதிலும் மதித்துக் கொண்டாடப்பட்ட சமயம் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். நமது இஸ்லாமிய சந்திர கணக்குப் படி அவர்கள் எழுபத்து எட்டு ஆண்டுகள், ஏழு மாதங்கள், ஒன்பது நாட்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

ஹிஜ்ரி 638 ரபீயுல் ஆகிர் பிறை 28 வெள்ளிக் கிழமை இரவில் (கி. பி. 1240) காலமானார்கள்.

ஷைகுல் அக்பர் விரிவான திருமறை வியாக்கியானம் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார்கள். அதில் பதினைந்து பாகங்கள் முடிவு பெற்று இருந்தன. அப்போது திரு குர்ஆனில் பாதிக்குத்தான் விளக்கம் எழுதப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவர்கள் உடல் பாதிக்கப்பட்டது. எனினும், அவர்கள் விடாது தொடர்ந்து விரிவுரையை எழுதிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் 'ஸூரத்துல் கஹ்பு' என்ற அதி அற்புதமான அத்தியாய வியாக்கியானம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அவர்களால் எழுத இயலாதுபோன சமயம், தங்கள் மாணவர் ஒருவரிடம் சொல்லி எழுதச் செய்து வந்தார்கள். பிரஸ்தாப அத்தியாயத்தில் வரும்,

> "பின்னர் அவர்கள் நம் அடியார்களுள் ஒருவரைக் கண்டு கொண்டனர். அவருக்கு (அந்த அடியாருக்கு) நம்முடைய சொந்தமான நல்லருளை அளித்து, நமக்குச் சொந்தமான ஒரு ஞானத்தையும் கற்பித்திருந்தோம்" (18 : 65)

என்ற வசனத்துக்கு விளக்கம் சொல்லத் தொடங்கிய சமயம் அவர்களுடைய நல்லாத்மா அவர்கள் பூத உடலை விட்டு அகன்றது. எத்துணை பொருத்தமான திருவசனம் இது என்பதை வாசகப் பெருமக்களே சிந்தித்து உணர வேண்டும்.

மாபெரும் ஞானநாதர்களுள் ஒருவரும், வாழ்க்கையின் யதார்த்தத்தை அறிந்தவர்களும், அதி அற்புதமான பாடல்களை எழுதியவர்களும், தங்கள் காலத்துக் குதுபும், மானிட இதயங்கள்— அறிவின் எஜமானருமான ஷைகுல் அக்பர் தங்கள் பூத உடலை நீத்தார்கள். இஸ்லாமியப் பூங்காவுக்கு அளிக்கபபட்ட நறுமணம் மிக்க தென்றலை காலம் வாபஸ் பெற்றுக்கொண்டது. அவர்களுடைய பூத உடல் ஸலாஹ் என்று சொல்லப்படும் இடத்தில் பல்லாயிரவர் கூடி நின்று ஜனஸா தொழுகை நடத்தப்பட்டபின் நல்லடக்கம் செய்யப் பட்டது. இன்றும் தினமும் ஆயிரக்கணக்கான வர்கள் அங்கே சென்று அவர்களை 'ஜியாரத்து'ச் செய்து வருகின்றனர். இன்றைய அரசாங்கம் அவர்களுடைய அடக்க ஸ்தலத்தை நல்ல முறை யில் வைத்திருப்பதுடன், யாவரும் சுலபமாகச் செல்வதற்கான பஸ் போன்ற போக்குவரத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

சிருஷ்டியின் அந்தரங்கம் அறிந்தவர்கள்

ஷைகுல் அக்பர் 'இஸ்முல் அஃலம்' விளங்கிய வர்களாகவும், பல்வேறு உலகங்கள், கிரகங்கள் பற்றிய ஞானங்களை அறிந்தவர்களாகவும் இருந் தார்கள். உதிப்பின் மூலமே இரும்பைப் பொன் ஞக்கும் கலையும் அவர்களுக்குக் கைவல்யமாகி இருந்தது. மேலும், அவர்கள் சிருஷ்டிகளின் அந்தரங்கங்கள் திருமறையில் மறைத்து வைக்கப் பட்டுள்ளதை உணர்ந்தார்கள். அரபி எழுத்துக் களின் அசல் எண்ணிக்கை என்ன என்ற விபரம் தெரிந்துவிட்டால், திருமறை வசனங்களிலிருந்து சிருஷ்டியிலுள்ள இரகசியங்கள் பலவற்றை அறிய

முடியும் என்று உறுதி கொண்டு அந்த ஆராய்ச்சி யில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய சத்முயற்சி யின் பயனாய் அவற்றின் அந்தரங்கம் அவர்களுக்கு உதிப்பாயிற்று. சிருஷ்டிகளைக் கணக்கெடுப்பதற் கான அரபி எழுத்துக்களின் சரியான எண்ணிக்கை அவர்களுக்குக் கைவல்யமாயிற்று. அப்போது அவர்கள் அடைந்த மலைப்புக்கு எல்லையே இல்லாது போயிற்று. அவற்றை நூல் வடிவில் எழுதி மனித கோடிகள் அப்போதே அவற்றை அறியுமாறு செய்யலாம் என்று அவர்கள் துணிந்தார்கள். ஆனால், இப்பூமி மீது நடக்கவிருக்கும் பிரளயத் துக்குப்பின் முஸ்லிம் சமுதாயம் தலை தூக்கும் காலத்தில் பகிரங்கமாகவேண்டிய ரகசியங்கள் அவை என்றும், எனவே அவர்கள் அவற்றை வெளியிட வேண்டாம் என்றும் அவர்களுடைய கனவில் உத்தரவு உண்டாகிவிட்டது. அதனால் அவர்கள் அவற்றை எழுதாது இருந்துவிட்டார் களாயினும், கடைசிக் காலத்தில் இஸ்லாம் தலை தூக்கும் சமயம் தோன்ற இருக்கும் இமாமுக்கு (அகில உலக முஸ்லிம் தலைவருக்கு) உதவியாகத் தங்கள் ஆத்மாவும் இறங்கிவந்து கண்ணுக்குத் தெரியாத நிலையில் யோசனை கூறுவதாக இருக்கும் என்று அவர்கள் தங்கள் நூல் ஒன்றில் கூறி உள்ளார்கள். அக்காலை 'அஸ்ஹாபுல் கஹ்பு'கள் (குகையின் தோழர்கள்) பலரும் குகையிலிருந்து வெளியாவார்கள் என்றும் அவர்கள் எழுதி உள்ளார்கள். திருமறையிலுள்ள 'ஸூரத்துல் கஹ்பு' அக்கால தீர்க்கதரிசனங்களைத் தன்ன கத்தே கொண்டுள்ளது என்று அவர்களும் குறிப் பிட்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

அவர்களுடைய புதல்வர்கள்

ஷைகுல் அக்பர் மால்டா என்னும் இடத்தில் இருக்கும்போது அங்கே ஒரு மணம் முடித்து இருந்தார். இவர் மூலம் அவர்களுக்குப் புதல்வர் ஒருவர் (ஹிஜ்ரி 618 ரமலானில்) பிறந்தார். இவர் பின்னர் தமாஸ்கஸில் அவர்களோடேயே வாழ வந்துவிட்டார். இவர் ஹதீஸ் கலையில் சிறந்த தேர்ச்சி பெற்று, ஹதீஸ் வியாக்கியான வகுப்புகளை நடத்தினார். அத்துடன் பாடல்கள் எழுதியும் புகழ் பெற்றார். இவருடைய பாடல்களின் தொகுப்பான 'திவான்' ஒன்று உண்டு. தமாஸ்கஸில் ஷைகுல் அக்பர் மணந்த ஹன்பலி மத்ஹபின் காதியாரின் புதல்விக்குப் பிறந்த புதல்வர் ஒருவர் உண்டு. இவரும் தமது காலத்தில் புகழுடன் வாழ்ந்தவர்தாம். இவர்கள் இருவருமே ஷைகுல் அக்பருடைய அடக்க ஸ்தலத்தை ஒட்டியே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஷைகுல் அக்பரைப் பற்றி பெரியார்கள்

ஷைகுல் அக்பர் சாதாரண ஜனங்களால் எந்த அளவு போற்றப்பட்டார்கள், மதிக்கப்பட்டார்கள் என்பதை முன் பக்கங்களில் நெடுகிலும் பார்த்திருக்கிறோம். அவர்கள் ஜீவிய காலத்தில் மட்டுமன்றி அவர்கள் மறைவுக்குப்பின் இன்றுவரை அவர்கள் நூற்களைப் பிரதிசெய்து கொடுக்கப் பலரும் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர். இதனால் விரைவில் அவர்கள் நூற்கள் நெடுகிலும் பரவ வசதியாய் இருந்தது. இவ்வாறு பிரதி எடுப்பதால் அவர்களுடைய நல் ஆசியை அடைய முடிகிறது என்று இன்றும் நம்பி

வருகின்றனர். அறிஞர் பெருமக்களிடை அவர்கள் வைத்துப் போற்றப்பட்ட அளவை இனி இங்கே பார்ப்போம்.

அல்லாமா ஜமாலுத்தீன் (ரஹ்) எழுதுகிறார்கள்: "தமாஸ்கஸ் நகரில் நான் முஹியித்தீனைக் கண்டேன். தரீக்காவின் ஞானநாதர்களில் அவர்களே மகா பெரியவர்களாய் இருந்தார்கள். அவர்கள் தங்களால் பெற்று அடைய முடிந்த சகல கலைஞானங்களையும் பெற்றிருந்தார்கள். அத்துடன் இறைவனால் தங்களுக்கு அருளப்பெற்ற அருள் ஞானங்களையும் அடையப் பெற்றிருந்தார்கள். அவர்கள் அடைந்திருந்தது மிகவும் முக்கியமான ஸ்தானம். ...... அவர்கள் ஏராளமான நூற்களை எழுதியுள்ளார்கள். அறிஞர்களும், சாதாரண ஜனங்களும் அவர்கள் உபன்னியாசங்களைக் கேட்டதும் பரவசமடைந்தனர். அவர்களுடைய சீடர்களிலும் நூலாசிரியர்கள் பலர் உண்டு. ஷைகுல் அக்பருக்கும் என் குருநாதர் அல் ஹர்ராருக்கும் இடையே அன்பும் சகோதர உணர்வும் நிரம்பி இருந்தன."

இப்னு கமால் பாஷா தங்கள் 'பத்வா'வில் எழுதுகிறார்கள்: "இப்னுல் அரபி அத்தாயி அல் அந்தலூஸி சம்பூரணமான 'முஜ்தஹித்' என்பதை மனிதர்களே, நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அவர்களுடைய கலாஞானம் கடல் போன்றது; அவர்களுடைய காரணங்கள் அற்புதமானவை. அவர்களை எதிர்ப்பவன் தவறு செய்பவன் ஆகிறான்; அவர்களைக் கண்டிப்பவன் வழி தவறுபவன் ஆகிறான்; இத்தகையவர்களைத் தண்டிப்பது சுல்தானுடைய கடமையாகும்."

ஷைகுல் அக்பரைப் போற்றி இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி நூல் ஒன்றே எழுதியுள்ளார்கள். அதன் பெயர் 'தன்பீஹ் காபி பி தன்ஸியாத்தெ இப்னுல் அரபி' என்பதாகும்.

இமாம் தஹ்பீ ஷைகுல் அக்பரைப் பற்றி எழுதுகிறார்கள்: அவர்களுடைய 'மொழிவளம் கடல் போன்றது; அவர்களுடைய சுடர் வீசும் அறிவுத் திறனும், அதி அற்புதமான நினைவுத் திறனும், பார்வையை மழுங்கவைக்கும் மனோ சக்தியும், 'இர்பான்' என்ற மெய்ஞ்ஞானம் பற்றி அவர்கள் அருளிய எண்ணற்ற நூற்களிலே பரந்து விரிந்து காணக்கிடக்கின்றன. ஸூபி தத்துவம் பற்றிய பிரச்சினைகளை விளக்குவதில் அவர்கள் கையாண்டுள்ள திறனை யாரும் வியந்து போற்றாமல் இருக்கமுடியாது. அவர்கள் பரவச நிலையில் பாடல்கள் கூறினால் அவர்கள் அப்படியே மயங்கி விழுந்துவிடுவதுண்டு; அப்போது குடி போதையில் கிடப்பவர்கள் போல் காணப் படுவார்கள்."

அவர்களுடைய 'புத்தூஹாத்'தைச் சுருக்கி எழுதிய ஷைகு அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி "இப்னுல் அரபி மாபெரும் ஞானநாதர்" என்று கூறுகிறார்கள்.

இப்னுல் மர்கீ தமது 'ரௌலா'வில், "ஷைகுல் அக்பருடைய சித்தாந்தங்களை ஐயுறுவது மெய் விஸ்வாசமற்ற தன்மையாகும்" என்று கூறு கிறார்கள்.

நஜ்முத்தீன் இஸ்பஹானி, அதாவுல்லா இஸ்கந்திரி ஆகிய ஞானநாதர்கள் இருவருமே அவர்களை மாபெரும் மெய்நிலை கண்ட மகான் என்று போற்றுகின்றனர்.

மாபெரும் அரபிப் பேரகராதியான 'காமூஸை' தொகுத்த மஜ்துத்தீன் பிரோஸாபாத்தியிடம் வினவப்பட்டது, ஷைகுல் அக்பருடைய நூற்களைப் படிக்கலாமா என்று. இதற்குப் பதில் தரும் முறையில் அவர்கள், 'அல் இக்திபாத்து பி முஃஅலஜதி இப்னுல் கையாத்' என்ற நூலையே எழுதிவிட்டார்கள். அதில் ஓரிடத்தில் அவர்கள் எழுதுகிறார்கள்: "ஷைகுல் அக்பர் அவர்கள் தரீக்காவின் ஞான வழிகாட்டியாவார்கள். ஞானத்திலும், விளக்க சக்தியிலும்கூட அவர்கள் வழிகாட்டியாகவே விளங்கினார்கள். அகமியமான விஷயங்களின் ஆராய்ச்சியில் அவர்கள் ஒரு இமாமின் அந்தஸ்தில் இருந்தார்கள். அவர்களுடைய நூற்களும், சிந்தனைகளுமே அலைமோதும் பெருங்கடலாகவே விளங்குகின்றன. அவற்றின் அடித்தளத்திலுள்ள முத்துக்களையும், அந்தக் கடலின் எல்லையையுமே கண்டவர்களில்லை. அல்லாஹ்வின் ஞானம் அதைப் பெறத் தகுதி வாய்ந்தவர்கள்மீது மட்டுமே சொரியப்படுகிறது. அவர்களுடைய நூற்களின் விசேஷம் என்னவென்றால், அவற்றைப் படித்துச் சிந்திப்பவர்களுடைய இதயம் விரிவடையும்; அவர்களுடைய முடிச்சவிழ்க்க இயலாப் சங்கடங்கள் அகலும்; தங்கள் பிரச்சினைகள் சுலபமாகத் தீர்ந்துவிடும். அதிவிசேஷமாகப் மீது இறைவனுடைய மெய்யருள் அவனுடைய விசேஷமான பொழியப்பட்டு,

ஞானக் கதவுகள் தங்கள் முன் திறக்கப் பெற்றவர்களுக்கே அன்றி மற்றவர்களுக்கு இவ்வாறு நூற்கள் எழுதுவது சாத்தியமே இல்லை. அவர்கள் நானூறு நூற்கள் எழுதியுள்ளார்கள். திருமறைக்கு விளக்கமாக அவர்கள் எழுதிய விரிவுரை முற்றுப் பெருமல் நிற்கிறது. சிலர் அவர்களை புறக்கணிக்க முயல்கிருர்கள்; அறிவிலிகள் அவர்களை 'நிராகரிப்பவர்' என்று கூறும் அளவுக்கே துணிந்து விடுகின்றனர். இதன் காரணம் ஷைகுல் அக்பருடைய வாய்மொழிகளையும், செயல்களையும், கவிதைகளையும் புரிந்து கொள்ளாத மடமையால் வரும் தவருகும். இத்தகைய விரிவிலா மதியினரின் துரதிஷ்டக் கரங்கள், அவர்களுடைய கண்மூடித் தனம் காரணமாக அவற்றின் கனிகளை நெருங்க இயலவில்லை.''

ஷைகு இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாம் என்ற பெரியாரின் பணியாள் தெரிவித்ததாக ஷைகுல் இஸ்லாம் ஸலாஹுத்தீனும், மற்றும் பல அறிஞர்களும் இந்த நிகழ்ச்சியைத் தெரிவித்து உள்ளனர்: "ஒரு சமயம் நாங்கள் அனைவரும் ஷைகு இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாமின் வகுப்பறையில் அமர்ந்திருந்தோம். அப்போது 'ஜிந்தீக்' என்ற வார்த்தை எவ்வாறு வந்தது, அதன் மூலம் என்ன என்பது பற்றி சர்ச்சை நடந்தது. அது அரபி வார்த்தையா, அல்லது பாரஸீக வார்த்தையா என்று ஒருவர் வினவினர். கூடியிருந்த பிரமுகர்களில் ஒருவர் சொன்னர், அது அரபியாக மாறிவிட்ட பாரஸீக வார்த்தை, அதன் அசல் பொருள் ஜான் தான் (பெண்ணின் கோட்பாடு), ஆனல் இப்போது அது நிராகரிப்பை

மெய்விஸ்வாசம் என்ற போர்வையில் வெளியிடு வதைக் குறிக்கும் என்று. உடனே இன்னொருவர், "அதாவது யாரைப் போல்?" என்று வினவினர். இஸ்லாத்தின் அவர்கள் பக்கல் அமர்ந்திருந்த மனிதர் ஒருவர், "தமாஸ்கஸிலுள்ள இப்னுல் அரபியைப் போல" என்று விளக்கினர். ஷைகு அவர்கள் பேசவில்லை; இதை மறுத்துச் சொல்லவும் இல்லை. அன்று நான் நோன்பு பிடித்திருந்தேன். ஷைகு அவர்கள் என்னைத் தங்களோடு நோன்பு திறக்க அழைத்தார்கள். என்னிடம் மிகுந்த அன்போடும் பரிவோடும் நடந்து கொண்டார்கள். நான் கேட்டேன், "ஷைகு அவர்களே, நமது காலத்தில் மிகவும் தலையான ஞானி (குத்பு) யார் என்று தாங்கள் அறிவீர்களல்லவா?" என்று. "அது பற்றி உனக்கென்ன? நீ சாப்பிடு" என்று அவர்கள் பதிலளித்தார்கள். நான் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன் என்று அவர்கள் அறிந்து கொண்டு விட்டார்கள். நானும் விடாமல் அந்த ஞானி யார் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தேன். அவர்கள் புன்னகையுடன், "ஷைகு முஹியித்தீன் இப்னுல் அரபிதான்" என்று பதிலளித்தார்கள். எனக்குப் பெரிய வியப்பாக இருந்தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தேன். பின்னர் அவர்கள் இடம், "அன்று காலையில்தான் ஒருவர் அவர்களை 'ஜிந்தீக்' என்று தங்கள் சமூகத்தில் குற்றம் சாட்டினர். அப்போது ஷைகு அவர்கள் ஒரு பதிலும் சொல்லாமல் பேசாமல் இருந்து விட்டீர்கள். இப்போது ஷைகுல் அக்பர் நம் கால குத்பு என்று சொல்கிறீர்களே!" என்று கேட்டேன். அவர்கள்

சொன்னார்கள், "நீ வாயை மூடு; அது மார்க்கச் சட்டமே அறிந்த 'பகீஹ்'களின் கூட்டம்" என்று.

ஸிரியாவைச் சேர்ந்த மாபெரும் ஞான நாதர்களுள் ஒருவரான ஷைகு கமாலுத்தீன் ஜமைக்கானீ எழுதுகிறார்கள்: "ஷைகு முஹியித்தீன் இப்னுல் ஆரபியை எதிர்ப்பவர்கள் எத்துணை அறியாமை உடையவர்களாய் இருக்கிறார்கள்! அவர்களுடைய மகத்தான வாய்மொழிகளும், அவர்களுடைய நூற்களிலுள்ள விலைமதிப்பில்லாக் கருத்துக்களும் இவர்கள் போன்ற மந்த மதியினரின் அறிவுக்கு எட்டவில்லை. இத்தகையவர்கள் அத்தகைய கடினமான பகுதிகளை என்னிடம் கொண்டுவந்தால் அவற்றின் யதார்த்தமான பொருள் என்ன என்பதை நான் அவர்களுக்கு எடுத்துரைப்பேன். அவர்களுடைய அறியாமைக்காக அவர்களை வெட்கப்பட வைப்பேன். ஷைகுல் அக்பர் 'புஸூஸுல் ஹிக'த்தை எழுதியது நபி பெருமான் (ஸல்) அவர்களுடைய நேரடியான வழிகாட்டுதலுடன் தான். அவர்கள் உத்தரவுப் படியே ஜனங்களிடை வந்து மெய்ஞ்ஞான அறிவைப் பரப்பினார்கள்."

அவர்களுடைய வாய்மொழிகள்

ஷைகுல் அக்பருடைய வாய்மொழிகள் மகத்தானவை. படித்துச் சிந்திக்கவேண்டிய சிலவற்றை இங்கே தரலாம்:

1. அறிஞனுடைய உபன்னியாசம் கேட்பவனுடைய அறிவுக்கு எட்டுவதாக இருக்கவேண்டும்;

கேட்பவனுடைய பலஹீனங்களையும், அவன் அகத்தே குடிகொண்ட கோப தாபங்களையும் அகற்றுவதாக இருக்கவேண்டும்.

2. ஒருவர் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்வது உனக்குக் கஷ்டமாகப் பட்டால், அதற்குப் பதில் அளியாதே! அவர் பாத்திரம் நிரம்பியுள்ளது; அவருக்குப் பதில் தேவையில்லை.

3. இறைவனுடைய ஏகத்துவம் பற்றி கொஞ்சம் அறிந்தவனைவிட ஒரு கழுதை அதிகம் அறிந்தது என்று கூறலாம்.

4. ஐயப்பாடுகளை விட்டு விரைந்தோடு.

5. அறிஞர்கள் வாய்மொழிகளுக்கு ஜனங்களில் பலர் நேர் எதிரிடையான பொருள் கொண்டு விடுகின்றனர்.

6. அறிஞன் ஒருவன் தன் மனத்தில் ஓடும் எண்ணங்களை வெளியிட்டால் மார்க்க அறிஞர்கள் எனப்படும் சிலர் அவனை அறிவிலி என்று கருதுகின்றனர்; அவனை எதிர்த்து ஒதுக்கவும் முனைகின்றனர். உண்மை என்னவென்றால், இறைவன் தன் அன்பனுக்கு அற்புதங்கள் நிகழ்த்தும் சக்தியை அருளுகிறான். இது நபிமார்கள் நிகழ்த்தியது போன்ற ஒருவகை. அறிவாளிகள் சிலர் தமது கருத்துக்களை விளங்கிக் கொள்ளவில்லை என்பதற்காக ஞானிகள் தமது முறையில் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதில் தவறு ஏதும் இல்லை.

7. ஒரு குழுவினர் சொல்வது ஒருவனுக்குப் பிடிக்காவிட்டால் அவர்கள் சகவாசத்தில் அவன்

இருக்கக்கூடாது; பரஸ்பர அறிவு இல்லாத தோழமை விஷம் போன்றது.

8. மிகவும் அண்மையான தன்மை என்பது ஒரு திரையாகும். இது மிகப் பெரிய தூரம் போன்றது. இறைவன் நமக்கு நம் பிடரி நரம்பை விட அருகில் இருப்பானாயின், அவனுக்கும் நமக்கும் இடையில் உள்ள எழுபதினாயிரத் திரைகள் ஏன் ?

9. தெய்வீக அகமியங்களைப் பற்றிய ஞானத்தில் ஐயத்துக்கு இடம் கொடாதீர்கள்; கலைஞான சர்ச்சைகளில்தான் இந்த ஐயத்துக்கு இடமுண்டு (மெய்யறிவு ஞானத்தில் அன்று).

10. ஞான குருநாதருடைய தகுதியாவது, ஒரு முரீதுக்குத் தம்மிடம் தேவையான சகல அம்சங்களையும் அடையப் பெற்றிருப்பதுதான்; அற்புதங்கள் நிகழ்த்துவதன்று.

11. மூன்று 'அய்ன்'களை ஒதுக்கியவர் தாம் ஸூபி ஆவார். அவை 'லீ' (எனக்காக) என்பதும், 'இத்தி' (என்னுடன்) என்பதும், 'மதாய்யி' (என் பொருள்) என்பதுமாம். அதாவது, அவர் எதையும் தமக்குரியதாகக் கூறிக்கொள்ளக் கூடாது.

12. இதயம் லயிப்பான நிலையில் (தொழுவது) தொழுகையின் எலும்புகளில் உள்ள மூளையாகும். இந்த மூளை மூலமே அவயவங்கள் பலம் பெறுகின்றன. அது போன்று இதய லயிப்பால்தான் தொழுபவனுடைய பயபக்தி பலமுடையதாக ஆகிறது.

13. நபிமார்களின் மார்க்கங்களில் உள்ள ஒரு சிறு கட்டளையை மீறும் எவனும் சம்பூரணமான மனிதன் என்ற நிலையை அடைய முடியாது. இந்த நிலையை அடைந்து விட்டதாகக் கூறிக் கொண்டு நபிபெருமானாரும், அவர்களுக்கு முந்திய நபிமார்களும் கொணர்ந்த சரியான கோட்பாடுகளை மீறுபவன் பொய்யன் ஆவான்.

14. சன்மார்க்க நெறிமுறையை (ஷரீஅத்தை) மீறுபவன்— விண் முட்டும் படியான புகழை எய்தியிருப்பினும்— எதையும் அடையப் பெற்றவனல்லன்.

15. ஹே தெய்வீக நல்முத்தே, அழிவு உடைய உடலான இருண்ட சிப்பியுள் குடி இருக்கும் வெண்முத்தே, அந்தோ, சாதாரண ரத்தினங்களை நாங்கள் மதித்துப் பாதுகாக்கிறோம்; உன் விலை மதிப்பிலா இயல்பையோ புறக்கணித்தே விடுகிறோம்!

அவர்கள் நூற்களின் தன்மை

ஷைகுல் அக்பருடைய நூற்களின் எண்ணிக்கையையும், அவற்றுள் பலவற்றின் அகண்டமான தன்மையையும் எண்ணிப் பார்த்தால் நாம் வியப்பும் மலைப்பும் அடையாமல் இருக்க முடியாது. அத்தனையையும் படித்துத் தொகுத்தவர்கள் சிலரேனும் இருந்தார்களா என்றுகூட நாம் ஐயுற நேரும். அத்தகைய பாரதூரமான நூற்கள் அவை. ஜாமி (ரஹ்) தங்கள் 'நபஹாத்துல் உன்ஸ்' என்ற நூலில் இவர்கள் ஐநூறு நூற்கள் வரை எழுதியுள்ளார்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

இதற்கு முன்னுள்ள தலைப்பில் ‘காமூஸ்’ ஆசிரியர் மஜ்துத்தீன் பிரோஸாபாத்தி அவர்கள் நானூறு நூற்கள் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஷைகுல் அக்பர் தங்கள் எழுபத்து மூன்ருவது வயதில் (அவர்கள் காலமாவதற்கு ஐந்து ஆண்டு களுக்கு முன்) தாங்கள் எழுதிய நூற்களின் பட்டியல் ஒன்றை தயாரித்துத் தந்துள்ளார்கள். அதில் அவர்கள் இருநூற்றி எண்பத்து ஒன்பது நூற்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, எப்படிப் பார்த்தாலும் அவர்கள் முன்னூறுக்குக் குறையாத நூற்களை எழுதி இருக்கிருர்கள் என்று கொள்ள இடமுண்டு.

ஷைகுல் அக்பர் தினமும் சராசரி மூன்று குயர் தாள்கள் எழுதி வந்துள்ளார்கள். எனவே, அவர்கள் எழுத்து வேகம் எத்துணை சிறந்த தாக இருந்தது என்பதை உணரலாம். மேலும், அவர்கள் ஊர் விட்டு ஊர் பிரயாணம் செய்து கொண்டே நூற்களை எழுதிக் கொண்டிருந்திருக் கிருர்கள்; உபன்னியாசங்கள் நிகழ்த்துவது, பாடபோதனை புரிவது போன்ற வேலைகளையும் செய்து வந்திருக்கிருர்கள்; அத்தகைய நிலையில் இந்த அளவுக்கு அவர்கள் நூற்களை எழுதி யுள்ளார்கள் என்ருல் அது சாமானியமான சேவையா?

அதிலும் அவர்கள் எழுதியவை வெறும் சட்டப் பிரச்சினை சம்பந்தப்பட்டவையோ, வர லாற்று விபரங்களைத் தருபவையோ, சரித்திரமோ அன்று. அவை இறையொளி ஞானத்தை அள்ளி வழங்கும் அருள் சுடர்கள் நிறைந்தவை. அதிலும் அவர்கள் சொல்கிருர்கள்:

"இப்னு ஹஸம் இன்ன இன்ன சொன்னார் என்றோ, அஹ்மது இன்ன இன்ன சொன்னார் என்றோ, நுஃமான் இன்ன இன்ன சொன்னார் என்றோ எழுதுபவன்- சொல்பவன்- நான் அன்று" என்று.

ஷைகுல் அக்பருடைய இந்த வாய்மொழியைச் சிந்தித்தால் அவர்களுடைய அருமையான நூற்கள் பற்றிய நமது மதிப்பும் மரியாதையும் இன்னும் பன் மடங்கு அதிகமாகவன்றோ பெருகுகின்றன!

நூற்கள்

இனி அவர்களுடைய நூற்களுள் முக்கியமான வற்றை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்:

திருமறை விளக்கம்: ஸூபியாக்களுக்கு மட்டும் திருமறையின் அகமியங்களை விளக்கும் விரிவுரை ஒன்றை எட்டு வால்யூம்களில் அவர்கள் எழுதியுள்ளார்கள். யாவருக்குமான திருமறை விளக்கம் வேறு தனியாக எழுதப்பட்டு திரு மறையில் பாதிக்கு மட்டும் பதினைந்து வால்யூம் களில் அவர்கள் விரிவுரை நல்கியுள்ளார்கள். முன்னர் பிரஸ்தாபித்தது போல் அவர்கள் மரணம் காரணமாக இது ஸூரத்துல் கஹ்பில் 65ம் வசனத்தில் வந்து நின்று விட்டது.

'புதூஹாத்துல் மக்கிய்யா' (மக்காவில் உண் டான இறையருள் உதிப்புகள்): இது அவர் களுடைய தலையாய நூல் ஆகும். இது மக்காவில் அவர்கள் 'தவாப்' செய்து கொண்டிருந்த சமயம் அமரர் ஒருவரால் தங்களுக்கு உதிப்பாக்கித் தரப் பட்டது என்று அறிவித்துள்ளார்கள். இது பற்றி

முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். இதை மட்டும் தாங்கள் எழுதியிருக்கா விட்டால் தங்களை நெருப்பிலிட்டுக் கொளுத்தியிருப்பார்கள் என்று அவர்கள் இதன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் மொத்தம் ஐநூற்று அறுபது அத்தியாயங்கள் உண்டு. இத்துணை பாரதூரமான நூலின் சாரத்தை இதிலுள்ள 559-ம் அத்தியாயத்தில் தந்துள்ளார்கள். அல்லாஹ்வைப் பற்றியும், அவன் இயல்பு பற்றியும் பல்வேறு இடங்களில் தலைப்புக்களில் இதில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆத்மாவைப் பற்றி, அதன் இயல்பு பற்றி, தொடக்கம் பற்றி, நபித்துவம், ஆதி–ஏற்பாடு, நீதித் தீர்ப்பு நாள், தண்டனை –சம்மானம், நரகம்–சொர்க்கம், திருமறை, அர்ஷ், லௌஹுல் மஹ்பூல், கலம், ஆதம் (அலை) சிருஷ்டிக்கப்பட்டது ஆகியவை பற்றி பல்வேறு அத்தியாயங்களில் விவரித்துள்ளார்கள். மார்க்கச் சட்டதிட்டங்கள், அவற்றின் விளக்கங்கள் முதலியவை வியக்கத்தக்க வண்ணம் அருமையாக இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்த நூலின் நடையே ஒரு தனிப் பாணியில் அமைந்தது.

ஷைகு அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி இந்த 'புதூஹாத்'தைச் சுருக்கி நூல் ஒன்று சமைத்துள்ளார்கள். அதன் பெயர் 'அல் யவாக்கிது வல் ஜவாஹிர்' என்பது. இது ஓர் அருமையான சுருக்க நூல். அத்துடன் இதில் ஷைகுல் அக்பரையும், இந்த நூலைப் பாராட்டியும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இன்ஷா அல்லாஹ், இந்த 'அல் யவாகிது வல் ஜவாஹிரில்' கண்ட

'புத்தூஹாத்' சுருக்க நூலை தமிழில் தர முயன்று கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே குறிப்பிட்டுக் கொள்கிறேன்—நூலாசிரியன்.)

புஸூஸுல் ஹிகம்: 'புத்தூஹாத்' துக்கு அடுத்தபடி மிகவும் பிரபலமானது இந்த 'புஸூஸ்' ஆகும். இருபத்து ஏழு அத்தியாயங்களைக் கொண்ட இதுவும் மிகவும் போற்றிக் கொண்டாடப் பட்டு வருகிறது. இதன் விளக்க நூல்கள் அரபி, பார்ஸீ, துருக்கி மொழி ஆகியவற்றில் ஏராளமாக வந்துள்ளது ஒன்றே இதன் பெருமைக்குச் சான்றாகும். இதன் ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு நபியின் பெயருடன் இணையப் பெற்றுள்ளது. முதல் அத்தியாயம் 'பாஸெ—ஆதமிய்யா' (ஆதம் நபியின் ஞானம்). இரண்டாம் அத்தியாயம் 'பாஸெ—சீசிய்யா' (சீசு நபியின் ஞானம்), மூன்றாம் அத்தியாயம் 'பாஸெ-நூஹிய்யா' (நூஹு நபியின் ஞானம்) என்ற ரீதியில் செல்கிறது. கடைசி இருபத்து ஏழாவது அத்தியாயம் 'பாஸெ—முஹம்மதிய்யா' (முஹம்மது நபியின் ஞானம்) என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் பிரஸ்தாப நபிமார்கள் வரலாறுகள் விவரிக்கப்படுவதாக யாரும் நினைத்தால் ஏமார்ந்து விடுவார்கள். தாங்கள் விவரிக்க வந்த கருத்துக்குப் பொருத்தமான தலைப்புகளை மட்டும் ஷைகுல் அக்பர் கொடுத்து இருக்கிறார்கள். உதாரணமாக, அமரர்களின் இயல்புகளை (மலக்கியா) விவரிக்க வந்த இடத்தில் ஹூத்து நபியின் பெயரைத் தலைப்பில் தந்துள்ளார்கள். ஞானத்தின் பல்வேறு பிரிவுகளை விவரிக்க வந்த சந்தர்ப்பத்தில் ஷுஐப் நபியின் பெயரையும், பர்ஜக்கின் (சடதத்துவத்துக்கும் ஆத்ம

உலகுக்கும் இடையில் உள்ள திரையின்) தன்மையை விவரிக்க காலீத் நபியின் பெயரையும், இறைவனுடைய கலா கத்ரை (விதிப்பு, தீர்ப்பை) விவரிக்க உஜைர் நபியின் பெயரையும் பயன் படுத்தியுள்ளார்கள்.

மேலும், இந்த 'புஸூஸ்' தங்களுக்கு நபி பெருமான் (ஸல்) அவர்களால் தங்கள் கனவில் அறிவிக்கப்பட்ட உதிப்புகள்தாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இது மெய்யறிவு ஞானம் சம்பந்த மான தரமான நூல் என்று அக்கால முஸ்லிம் கல்விக் கூடங்களில் பாட நூலாகவும் இருந்து உள்ளது. (இதன் சுருக்க நூல் ஒன்று, ஷைகு ஸதுருத்தீன் போன்ற ஞானநாதர்கள் தந்த விளக்க உரைகளோடு நம்மால் 'மெய்யறிவின் சுடர் ஒளிகள்' என்ற பெயரில் தர்ஜமாச் செய்யப் பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ், இது விரைவில் வெளிவரும்.— நூலாசிரியன்.)

புத்தூஹாத்துல் மதனிய்யா: இது மதீனாவில் முதன் முதலில் நபிபெருமானார் ரௌலாவைக் கண்ட சமயம் உண்டான உதிப்புகளைத் தரும் சிறிய நூல்.

கீமியா அஸ் ஸஆதா: ஏக இறைவன் மீது மெய்யுறுதி கொள்வதால் உண்டாகும் நற்பண்பு களையும், நல் இயல்புகளையும் விவரிக்கிறது. (இமாம் கஸ்ஸாலீ இதே பெயரில் பார்ஸீயில் எழுதியுள்ளது அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். இது வேறு நூல்.)

ஹிலியத்துல் அப்தால்: ஆனந்த வாழ்வுக்கு வழிகாட்டியான நூல். அவர்கள் மக்காவை அடுத்த தாயிபில் தங்கிய சமயம் எழுதியது.

இன்ஷாவுல் ஜவாகிர்: பிரபஞ்ச அமைப்பில் மனிதனுடைய மதிப்பு என்ன என்பதை விவரிக்கிறது.

உக்லத்துல் முஸ்தௌஃபித்: அமரர்களையும், விண்மீன்கள், பூமிபோன்ற வற்றின் மர்மங்களையும் தங்களுக்கே உரிய அருமையான பாணியில் விவரித்துள்ளார்கள்.

துஹாபத்துல் ஸபாரா: மெய்யறிவு பெற்ற ஞானி இறைவனைச் சென்றடைய வேண்டிய பாதை பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

கிதாபுத் தனஜ்ஜுலாத்: தனஜ்ஜுலாத் சம்பந்தப்பட்ட விபரங்களையும், கிதாபுத் தஜல்லியாத் அது சம்பந்தப்பட்ட விபரங்களையும் தருகின்றன.

இபாதா: அறிவின் மூன்று அடிப்படைகிளைகளான தெய்வ அறிவு, இவ்வுலகு பற்றிய அறிவு, சூக்கும உலகம் பற்றிய அறிவு ஆகிய மூன்றையும் விவரிக்கிறது. ஃபாயிதா: அரபி எழுத்துக்களின் உதவியால் பயன்கள் அறிவதை விவரிக்கிறது. 'திப்ப-ரூஹானி-திப்ப-ஜிஸ்மானி' உடல் பிணிக்கு மருந்துகள் இருப்பதுபோல் ஆத்மப் பிணிகளுக்கான நிவாரணிகளை விவரிக்கிறது.

தர்ஜுமானுல் அஷ்வாக்: ஷைகுல் அக்பர் எழுதிய அகமியக் கருத்துக்கள் அடங்கிய பாடல்களையும் அவற்றின் தத்துவார்த்த விளக்கங்களையும் தருகிறது. இதுபற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். (இதை அடுத்து வரும் 'நாற்களிலிருந்து' என்ற பகுதியின் கடைசியில் இந்த நூலின் முன்னுரையின் முக்கிய பகுதிகளையும், இதிலுள்ள எட்டுப் பாடல்களையும், அகமிய விளக்கங்களையும் படிப்பீர்கள்.)

'முவாகிஅத்துந் நுஜூம்: விண்மீன்களின் அமைப்பையும் அவை பற்றிய விபரங்களையும் இதில் விவரித்துள்ளார்கள். இவற்றின் அந்தரங்கங்களை அறியும் ஞானி ஒவ்வொன்றுமே ஓர் அற்புதமாக இருப்பதால் தாமே அற்புதம் நிகழ்த்த நினைக்க மாட்டார் என்று இதில் எழுதி உள்ளார்கள்.

முஹாதராத்துல் அப்ரார்: இது இலக்கிய, சரித்திர சம்பந்தமான விஷயங்களைப் பேசுகிறது.

ரிஸாலா பீ மஅறு அங் நப்ஸ் வர் ரூஹ்: மானிடனுடைய நப்ஸையும் ரூஹையும் பற்றிய விளக்க நூல்.

மாஹியத்தில் கல்பு: இதயத்தின் அந்தரங்கங்களை விவரிக்கிறது.

மற்றும் சில நூற்களின் பெயர்கள் வருமாறு: கிதாபுல் அக்லாக், அம்ரு முஹக்கம், மஜ்முஅல் ரிஸாயிலுல் இலாஹிய்யா, அல் ஜாமிஉ வ அல் தஃப்ஸில் ஃபி ஹகாயிக்குல் 'தன்ஸீல், அல் ஜத்வத்துல் முக்தபிஸாத், அல் மஅரிபுல் இலாஹிய்யா, அல் அஸ்ரா இலா மகாமில் அஸ்ஞ, அன்காவுல் மக்ரிப், பளாயிலுல் அப்தில் அஜீஸ் அல் மஹ்துல், கிதாபுல் அஜ்வீபா, அக்லத்துல் முஸ்தௌஃப், முவைஸ−ல் ஹஸஞ, லவாக்கில் உல் அன்வார்.

—❋—

நூற்களிலிருந்து

ஷைகுல் அக்பருடைய நூற்களிலிருந்து பகுதிகள்

ஷைகுல் அக்பருடைய நூற்கள் மகத்தானவை தாம். பாரதூரமான—அதி அற்புதமான கருத்துக் களை வெளியிடுபவைதாம். எனினும், அவற்றை வேறு மொழியில் ஆக்குவது என்பது சுலபமான வேலை அன்று. அவற்றின் கருத்துக்களையாவது இங்கே கொண்டுவர முயன்றுள்ளோம். இந்தப் பகுதிகள் ஷைகுல் அக்பருடைய நூற்கள் முழுமை யையும் படிக்கும் ஆவலைத் தூண்டுமாக!

புஸூஸுல் ஹிகம்

நாம் மொழிபெயர்த்து வைத்துள்ள 'புஸூஸுல் ஹிகம்' சுருக்க நூலிலிருந்து இந்தப் பகுதிகள் இங்கே எடுத்துத் தரப்பட்டுள்ளன.

இறைவனுடைய கருணை இறுதியில் யாவையும் பொதிந்து விடும் என்பதை விளக்கும் பகுதி இது:

"தன் முன்குடுமி தன் இறைவனின் பிடியில் இல்லாத உயிருள்ள ஜீவராசி எதுவும் இல்லை; நிச்சயமாக, எனது ரக்ஷகன் நேரான பாதையில் உள்ளான்" (அத். 11: வச. 56). இவ்வாறு (நேரிய) பாதையில் நடப்பவன் ஒவ்வொருவனும் நிந்திக்கப்பட்டவனுமல்லன்; வழி தவறியவனு மல்லன். இறைவனுடைய கண்டனமும் கோபமும் தாற்காலீகமானவை. கடைசியில் அவன் கருணையே யாவையும் பொதிந்ததாக ஆகி விடுகிறது. அல்லாஹ் அன்றி உள்ளவை (மா ஸிவல்லாஹ்) தம் இச்சைப்படி அசைய முடியாதவை; நேர் பாதையிலுள்ள தமது ரப்புக்கு வழிபட்டே நடப்பவை.

இறைவனுடைய சுடர் வெளிப்பாடுகளை நோட்டமிடுவது கொண்டு அவனைப் பற்றிக் கிட்டும் மெய்ஞ்ஞானம் (இல்மெ தௌக்கி) பல்வேறு மனிதர்களில் பல்வேறு வகைப்பட்டனவாக இருக்கின்றன. அவர்கள் யாவருடைய மூலஸ்தானமும் ஒன்ருய் இருந்து அவரவர் இயல்புக்கு ஏற்ப வேறுபடுகின்றன. "அவன் கேட்கும் கேள்வியாகவும், அவன் பார்க்கும் பார்வையாகவும் நான் ஆகிவிடுகிறேன்" என்று இறைவன் அருளி உள்ளானல்லவா! இதிலிருந்து, இறைவனுடைய 'நான்—தன்மை' தான் அடியானின் அவயவங்களில் நின்று நிலவுகிறது. ஒவ்வோர் அங்கத்துக்கும் அதற்கே உரிய 'இல்மெ-தௌக்கி' உண்டு என்பதும் தெளிவாகிறதன்ருே! இவ்வாறு 'நான்-தன்மை' ஒன்று; அங்கங்கள் பல; அவற்றின் உணர்வுகள் எண்ணற்றவை. இது தண்ணீர் ஒன்ருயும், அதன் ருசி மண்ணின் தன்மைக்கு ஏற்பப் பலவாயும் இருப்பது போன்றதாம். இது மெய்ஞ்ஞானப் பயிற்சி மூலம்- சுலூக் மூலம்- கிடைப்பதாகும். 'சுலூக்' என்ருல் நடப்பது என்று நேரடியான பொருள். இது ஆத்மாவுக்கு உணவை ஊட்டுகிறது.

"பாவாத்மாக்களை நாம் துறத்துவோம்" என்று இறைவன் கூறியுள்ளான். மேற்குக் காற்றைக் கொண்டு பாவாத்மாக்கள் சேரவேண்டிய இடத்தில் அவர்களைச் சேர்ப்பிப்பான் என்பது இதன் பொருளாகும். மேற்குக் காற்று என்பது அழிவை உண்டாக்கும் காற்ருகும். நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளினூர்கள், "கிழக்குக் காற்ருல் நான் வளம் பெற்றேன்; மேற்குக் காற்ருல் ஆது கூட்டத்

றினர் நாசமாக்கப்பட்டனர்" என்று மேற்குக் காற்று என்பது பாவத்தின் சின்னமாகும். இறைவன் பாவாத்மாக்களேயும், அவர்களுடைய இம்மையின் இச்சாபாசங்களேயும் குடுமியைப் பிடித்துத் தூக்கி ஜஹன்னம் என்ற நரகில் வீசுவான். இந்த ஜஹன்னம் என்பது இறைவனுக்கு நேர் மறு துருவத்தில்-அத்துணே எதிரிடையில்-உள்ளது. ஆனல், அங்கே அவர்கள் இறைவனுடைய அண்மையை அடைந்து விட்டனர். அவர்கள் தங்கள் செயல் காரணமாகத் தங்கள் ரப்பினல் அங்கே வழிநடத்தப்பட்டனர். இவ்வாறு அவர்கள் தங்கள் ரப்பின் நேர் பாதையிலுள்ளனர். அங்கே அவர்கள் தங்கள் இச்சையால் போகவில்லே; அவனல் குடுமியைப் பிடித்துத் தள்ளப்பட்டனர். இவ்வாறு குடுமி அவன் கையில் போனதன் மூலம் அவனுக்கு அருகாமையில் ஆகிவிட்டனர். இறைவன் சொல்கிருன், "(மரிப்பவனுக்கு) உங்களேவிட நாம் மிக அருகில் உள்ளோம்; ஆனல், நீங்கள் பார்ப்பதில்லே' (அத் 56: வச 85) என்று. மரணித்தவன் திரை அகற்றப்பட்டதால் பார்க்கிருன். இதில் நேர்மையாளர்கள், தீயவர்கள் என்ற பாகுபாடு காட்டப்படுவதில்லே...

"உலகிலுள்ள சகல ஜீவராசிகளின் முன் குடுமியும் தன் ரப்பிடமே உள்ளது.." என்ற செய்தியைவிட திருமறைமூலம் நமக்கு வந்துள்ள இதைவிடச் சிறந்த செய்தி வேறு எதுவும் இருக்க முடியாது. இதற்கான விளக்கம், "இறைவன் காதுகள், கண்கள், பாதங்கள், நாவு ஆகியவற்றின் யதார்த்தம் ஆவான்" என்பதில் இருக்கிறது. அதாவது, அவன் தன் அடியானின்

உடல், ஆத்மீகப் புலன்களின் யதார்த்தமாய் உள்ளான். "நிராகரிக்கும் காபிர்களை அன்றி என் அத்தாட்சிகளை மறுப்பவர்கள் யாருமில்லை" (அத். 29: வச. 17) என்ற திருவசனம் நம் சிந்தனைக்கு உரியது. (பாஸெ-ஹூத் தியா-ஹூத் நபியின் ஞானத்திலிருந்து.)

மனிதனுடைய சாரமான படிவம் இறைவன் உடைய படிவத்திலேயே படைக்கப்பட்டிருப்பதால் மனிதர்கள் கொலை செய்வதை - சன்மார்க்கப் போரில் நிகழும் உயிர்ப்பலி ஆயினும் கூட-அதை அவன் விரும்புவதில்லை என்பதையும், மானிட உயிரின் மாட்சியையும் விளக்கும் பகுதி:

மனிதன் என்பவன் ஆத்மா, உடல், நப்ஸ் என்ற மனம் ஆகிய மூன்று வஸ்துக்களால் ஆனவன். மனிதனுடைய சாரமான படிவத்தை இறைவன் தன் படிவத்திலேயே அமைத்தான். மனிதன் படைக்கப்பட்ட மர்மத்தை இறைவனை அன்றி யாரும் புரிந்து கொள்ள இயலாது. ஷரீஅத் என்ற சன்மார்க்க நெறிமுறையின் வரம்பை மீறி இதன் அமைப்பை உடைக்க முயல்பவன் தன் ஆத்மா மீதே ஆக்கிரமிப்புச் செய்யும் 'ஸாலிம்' ஆவான். இறைவன் பாது காத்து வளர்க்க நாடுவதை இவன் அழிப்பவன் ஆவான். இறைவனுடைய சிருஷ்டிகளைப் பாது காக்கும் பொருட்டு அவன் ஷரீஅத்தைக் கடுமை யாகப் பிரயோகிப்பதற்குப் பதில் அவர்களை அன்போடும் பரிவோடும் நடத்தி அவர்களைப் பாதுகாத்தல் சாலச் சிறந்ததாகும்.

பைத்துல் முகத்தஸில் தாவூது நபி (அலை) புனித மஸ்ஜிதைக் கட்ட நினைத்தபோது, அந்த முயற்சியில் அவர்கள் பலமுறை ஈடுபட்டார்கள். ஒவ்வொரு தடவை அதைக் கட்டி முடித்ததும் அது இடிந்து விழுந்துவிட்டது. இது பற்றி அவர்கள் இறைவனிடம் முறையிட்டார்கள். அப்போது, இறைவனிடமிருந்து, "இரத்தம் சிந்திய ஒருவர் கையால் கட்டப்படும் எனது இந்த இல்லம் நிலையில் நிற்காது கீழே விழவே செய்யும்" என்று 'வஹி' என்ற அறிவிப்பு வந்தது. தாவூது நபி சொன்னார்கள், "இறைவா, அந்த இரத்தம் பூரணமாக உன் பாதையிலன்றோ சிந்தப்பட்டது!" என்று. இறைவனிடமிருந்து பதில் வந்தது, "அது என் பாதையில் சிந்தப்பட்டது என்பது உண்மைதான்; ஆனால், (அவ்வாறு கொல்லப் பட்ட) அவர்களும் என் சிருஷ்டிகளில் சேர்ந்தவர் களல்லவா!" என்று. அப்போது தாவூது நபி, "அப்படியாயின், இறைவா, என் சந்ததியாரில் ஒருவர் கட்டி முடிக்கக் கிருபை செய்!" என்று பிரார்த்தித்தார்கள். அவர்கள் புதல்வர் சுலைமான் (அலை) அதைக் கட்டி முடிப்பார்கள் என்று அவர் களுக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது.

இந்த விருத்தாந்தம் இங்கே குறிப்பிடப் பட்டதன் காரணம், சட்டத்தைக் கடுமையாக நிறைவேற்றுவதைவிட இறைவனுடைய சிருஷ்டி களிடம் அன்போடும் பரிவோடும் நடந்து கொள்வது எத்துணையோ சிறந்ததாகும் என்பதே. இதனாலேயே இஸ்லாத்தின் எதிரிகளோடு சமா தானம் செய்துகொண்டு, அவர்கள் 'ஜிஸியா' என்னும் பாதுகாப்பு வரியைத் தந்தால் போதும்

என்று விட்டுவிடுவது தெய்வ அருளைப் பெறும் செயலாகும். அவர்கள் சமாதானத்தை நாடினால் நீயும் சமாதானத்தையே நாடவேண்டும். கொலை செய்யப்பட்டவருடைய விஷயத்தில் அவருடைய வாரிசுகள் அதற்குப் பகரமாக நஷ்ட ஈட்டுப் பணம் பெற்றுக்கொள்ள விரும்பினால், அதையே கொலை செய்தவன் மீது தண்டனையாக விதிக்கவும். வாரிசுகள் பலர் இருந்து, அவர்களிடை அபிப் பிராயபேதம் இருந்தால் கூட, நஷ்ட ஈட்டுப் பணம் பெற விருப்பம் தெரிவிப்பவரின் கருத்தை ஏற்று அதற்கேற்ப நியாயம் வழங்கவேண்டும். ஒட்டகையின் முதுகு வாரினால் அடிக்கப்பட்ட ஒருவர் மரணமடைந்தபோது நபி பெருமான் (ஸல்) அவர்கள் தோல்வார் கொல்லப் பயன்படும் ஆயுதங்களின் பட்டியலில் இடம் பெறவில்லை என்று கூறி குற்றவாளியை விடுதலை செய்து விட்டார்கள்.

"தீமைக்குப் பதில் பழி வாங்கத் தீமை செய்வது தீமையை வளர்ப்பதாகும்" என்று இறைவன் அருளியுள்ளான். பதிலுக்குப் பதில் செய்வது சன்மார்க்க நெறிமுறையில் (ஷரீ அத்தில்) அனுமதிக்கப்பட்டது எனினும், அப்போதும் அது தீயதுதான். அதைக் கைவிட்டு, உயிருக்கு நஷ்ட ஈட்டுப் பணம் பெற்றுக்கொண்டு மன்னித்து விடுவோருக்கு இறைவனும் தன் நன்கொடையை அருளுகிறான். ஏனெனில், கொலை செய்தவனும் இறைவனுடைய படிவத்தில் படைக் கப்பட்டவன்தானே! இவ்வாறு தன் படிவத்தில் ஆன ஒருவனை தனக்காக மன்னிப்பவரிடம் இறைவனும் அதிகக் கருணை காட்டுவதில் வியப்பு

இல்லையன்றோ! (பாஸெ-யூனாஸிய்யா-யூனாஸ் நபியின் ஞானம் என்பதிலிருந்து).

மனிதனின் தொழுகையில் இறைவனும் பங்கு கொள்வதை விவரிக்கும் பகுதி: "தொழுகையில் என் கண்களின் குளுமை தேக்கப்படுகிறது" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளது, (தொழுகையில்) இறைவனைத் தரிசித்தலாகும். இது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் ஆகும். "என்னை நீங்கள் நினைவு கூறுங்கள், நான் உங்களை நினைவு கூறுகிறேன்" (அத். 2: ஆ. 152) என்று இறைவன் அருளியுள்ளான். "தொழுகை இறைவன் மனிதன் ஆகிய இருவருக்கும் இடையில் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; ஒரு பகுதி இறைவனுடையது; மற்றது மனிதனுக்குரியது" என்றே மேலே குறிப்பிட்ட ஹதீஸின் தொடர்பான பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடியான், "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர் ரஹீம்" (அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால் தொடங்குகிறேன்) என்று கூறும்போது, இறைவன், "என் அடியான் என்னை நினைவு கூறுகிறான்" என்று கூறுகிறான்.

அடியான், "அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்" (சர்வலோக ரக்ஷகனான அல்லாஹ்வுக்கே சகல புகழும்) என்று புகழும்போது, இறைவன், "என் அடியான் என்னைப் போற்றித் துதிக்கிறான்" என்று கூறுகிறான்.

"இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன்" (உன்னையே வணங்குகிறன்; உன்னிடமே உதவி தேடுகிறேன்)–"இஹ்தி நஸ்திராத்துல் முஸ்தகீம்" (நேரான பாதையை எங்களுக்குக் காட்டியருள்)– அடியாளுல் செய்யப்படும் பிரார்த்தனை இது.

இவ்வாறு தொழுகையில் 'அல்-ஹம்து' ஸூரா ஓதுவது வாஜிப் (அவசியமானது) ஆகி விட்டது. இதை ஒதுக்குவது தொழுகையைச் செல்லாததாக ஆக்கிவிடுகிறது. தொழுகை இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஆன உரையாடல் ஆனதால் இறைவன் மனிதனுடைய கூட்டாளி ஆகிவிடுகிருன். "என்னிடம் துஆ இறைஞ்சுபவனுடைய கூட்டாளி நான்" என்று ஹதீஸ் குத்ஸியில் சொல்லப்பட்டுள்ளது. இறைவனுடைய கூட்டாளியான எவரும் 'பஸரே–ஹதீத்' என்ற கூரிய பார்வை உடையவராயின் அவனைக் காணமுடியும். தொழுகை இறைவனைத் தரிசித்தல்தான். இந்தப் பார்வை இல்லாதவன் அவனைக் காண்பதில்லை. தொழுகையில் அவனைக் காணுதவன், அவன் தன்னைக் காண்கிருன் என்ற மெய்யுறுதியாவது கொண்டிருக்க வேண்டும். தொழும்போது அவன் தன் கிப்லாவை முன்னோக்கி தன்னில் என்ன உதிப்பாகிறது என்று விழிப்புடன் இருக்கவேண்டும்.

தொழுகையில் தொழுபவன் தன் பின் நிற்பவர் களுக்கு, அல்லது அவர்கள் இல்லாத நிலையில் அவர்கள் இடத்தில் நிற்கக்கூடிய அமரர்களுக்கு இமாமத் செய்பவனுவான். இப்போது அவன் இறைவனிடமிருந்து செய்தியை எத்திவைக்கும்

(ரஸூல்) நபர் ஆகவும், அவன் பிரதிநிதியாகவும் நிற்கிருன். இப்போது அவன் 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமீதா" (அல்லாஹ் தன்னைப் புகழ்பவரின் போற்றுதலைக் கேட்டான்) என்று சொல்லும் போது, அவன் தான் செய்த போற்றுதலையும், தன் பின் நின்று தொழுபவர்களுடைய போற்று தலையும் இறைவன் கேட்டுள்ளான் என்று அவன் சார்பாக அறிவிக்கிருன். பின்னர் அவன்பின் நின்று தொழுபவர்கள் அல்லது அமரார்கள் சொல்வார்கள், "ரப்பனு, வ லக்கல் ஹம்து' (இறைவா, மேலும் புகழ் அனைத்தும் உனக்கே உரியது) என்று.

'ஸமி அல்லாஹு லிமன் ஹமீதா' (அல்லாஹ் தன்னைப் புகழ்பவரின் போற்றுதலைக் கேட்டான்) என்று இறைவன் தன் அடியானின் நாவாலேயே வெளியிடச் செய்திருப்பதுதான் தொழுகையில் உண்டான மகத்தான விசேஷம் ஆகும். இந்தத் 'தீதார்' எனும் பேரழகு தரிசனையைத் தொழு கையில் அடையப் பெருதவன் தொழுகையின் லக்ஷியத்தை அடையாதவனே: இவன் "கன் கண்களின் குழுமையை'' அடையப் பெருதவனே ஆவான். ஷரீஅத்திலேயே தொழுகைக்கு ஈடான கடமை எதுவும் இல்லை; காரணம், தொழுகையில் வேறு எந்த விஷயத்தின் பக்கமும்- அது இன்றி அமையாத மார்க்க விஷயமாயினும் சரி, அதன் பக்கலும்-மனம் திரும்பக் கூடாது. தொழுகை முடியும்வரை அது சம்பந்தப்பட்டவற்றில்தான் முழுக் கவனமும் நிலைத்திருக்க வேண்டும். "தொழுகை சகல மானக் கேடான வெறுக்கத்தக்க செயல்களுக்கும் இடையில் முட்டுக்கட்டையாக

நிற்கிறது'' என்றும் இறைவன் அறிவித்துள்ளான். அடியானை இறைவன் நினைவு கூர்வது மற்ற யாவையும் விடப் பெரும் பாக்கியமாகும். (வலா திக்ருல்லாஹி அக்பாரு) தன் தொழுகையில் அடியான் இறைவனைப் போற்றும்போது இறைவனுடைய இந்த திக்று நிகழ்கிறது. "(உங்கள் தொழுகையில்) நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அல்லாஹ் நன்கு அறிந்துள்ளான்." (அத் 29: ஆ 45) "(கவனிக்கும்) இதயமிருந்து, காது கொடுப்பவனுக்கு, நிச்சயமாக, இதில் படிப்பினையுள்ளது." (அத் 50: ஆ 37) (பாஸெ-முஹம் மதிய்யா: முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஞானம் என்பதிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.)

புத்தூஹாத்துல் மக்கிய்யா

இது நூர் என்னும் ஒளியிலிருந்து வெளிப் படும் மானிட அறிவு அல்லது உணர்வு பற்றிப் பேசும் பகுதியாகும்:

இறைவனை இவ்வுலகை விட்டும் மறைத் துள்ளவை இருளாலும், ஒளியாலும் ஆன திரைகளாகும். இவை ஒன்றைச் சார்ந்த தன்மையைச் சுட்டுகின்றன. அந்த சார்புத் தன்மை அவற்றின் இடையில் உள்ளதேதான்; அது திரைக்குள் இருப்பதை நோக்குவதன்று. இந்தச் சார்பில் இருந்து திரைகள் அகற்றப்பட்டால் அதனால் பெறக்கூடிய தரிசன பாக்கியம் கைவல்யமாகும். ஆனால், அந்தத் திரைகள் மறைப்பவையாகவே இருந்து வருகின்றன. அவை அப்படித்தான் இருக்கவேண்டும். திரைகள் அகற்றப்பட்டால் இவ்வுலகுக்கு என்ன நேரும் என்பதை எண்ணிப்

பாருங்கள்! இறைவன் தன் மகத்துவத்தைக் காண் போரை அதனாலேயே தகித்து விடுவதாகச் சொல்லியுள்ளான். ஆனால், சில சமயங்களில் சிருஷ்டிகள் தன்னைப் பார்க்கலாம் என்றும், பார்த் தாலும் அதனால் எரிபட்டு விடுவதில்லை என்றும் கூறி, அந்தத் தரிசனையில் திரைகள் அகற்றப் படுகின்றன என்றும், எனினும் அந்தத் தரிசனையே ஒரு திரைதான் என்றும் பிரகடனம் செய்கிறான். 'அவனுடைய சிருஷ்டிகளின் கண்கள் அவனைப் பார்க்க மாட்டா?'—மானிடர் இதன் தாத்பரியத்தை அறிந்தால் அவர்கள் தங்களை அறிவார்கள்; அவர்கள் தங்களை அறிந்தால் தங்கள் இறைவனை அறிவார்கள். யதார்த்தமாகவே அவர்கள் இறைவனை அறிந்துவிட்டார்களாயின் அவனோடு திருப்தியுற்று விடுவர்; அவனையே எண்ணுவர்; வானங்கள் பூமியின் ராஜ்ஜியத்தைப் பற்றிய எண்ணங்கள் அவர்களிடம் அற்றுப் போய்விடும். இவ்விஷயத்தின் அந்தரங்கத்தை அவர்கள் அறிவார்களாயின் வானங்கள் பூமியின் ராஜ்ஜியத் தின் சாரமானவனும் அவனே என்பதையும் உய்த் துணர்வார்கள்.

ஒளியின் உதவி இன்றேல், மனத்தாலோ புலன்களாலோ, கற்பனையாலோ எதையும் அறிய இயலாது. சாதாரண ஜனங்கள் இந்த ஒளியை மனம் (அகம்) என்பர்; மெய்ஞ்ஞானியர் இதை உய்த்துணரும் வெளிச்சம் என்பர். கேட்க உதவும் ஒளியைக் கேட்கும் சக்தி என்பீர்கள்; பார்க்க உதவும் ஒளியைப் பார்வை என்பீர்கள். இருப்பதைக் காண உதவுவது ஒளி. உய்த் துணரும் சக்தியுடைய ஒவ்வொன்றும் ஒளியுடன்

ஏதாவது ஒரு வகையில் தொடர்பு உடையவை தாம். உய்த்துணரப்படும் பொருள் ஒவ்வொன்றும் ஒளியான (நூர் ஆன) இறைவனுடன் தொடர்பு உடையனவாகும்.

மறுமையில் நபிமார்களும், ஸாலிஹீன் களும் ஞான நாதர்களும் அடையப் பெறும் தரிசன பாக்கியத்தின் தராதரத்தை விவரிக்கும் 'புத்தூஹாத்' பகுதி வருமாறு:

பாக்கியமுடையவர்கள் சொர்க்கத்தில் வெண் பனிமலையைச் சுற்றிக் கூடியவர்களாய்த் தங்கள் இறைவனுடைய திவ்விய தரிசனைக்காகக் காத்து நிற்கின்றனர். அவர்கள் தத்தம் படித்தரங் களுக்கு உரிய இடங்களில் நின்று கொண்டிருக்கும் போது கண்ணைப் பறிக்கும் ஜோதி தோன்றுகிறது. உடனே அவர்கள் யாவரும் 'சஜ்தா' (சாஷ்டாங்கம்) செய்கின்றனர். அப்போது அவர்கள் கண்கள் மூலம் அவர்கள் உடலின் அந்தரங்கத்துள் எல்லாம், ஆத்மாவின் உள் எல்லாம் ஒளி ஊடுருவு கிறது. அதனால் அந்தப் பாக்கியவான்கள் காதும் கண்ணும் ஆனவர்களாக- கேட்பதும் பார்ப்பதும் ஆக- ஆகி விடுகின்றனர். இந்த ஒளியால் அவர்கள் பெற்ற மாபெரும் பாக்கியம் இது. இவ்வாறு அவர்கள் சர்வ சக்தனை அல்லாஹ்வின் சாந்நித்திய தரிசனைக்குத் தயார் ஆகின்றனர். பின்னர் நபிபெருமான் (ஸல்) அவர்கள் அங்கே தோன்றி அவர்களை நோக்கி, "தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே, அல்லாஹ்வின் திவ்விய தரிசனைக் காக உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்" என்று அருளுவார்கள். சர்வ சக்தனை மறைத்

திருக்கும் முப்பெரும் திரைகளான மகத்துவம், மாட்சி, அதிகாரம் ஆகிய மூன்றும் அவன் திருச் சித்தப்படி அப்பால் அகற்றப்பட்டு சத்தியம் (ஹக்கு) வெளியிடப்படுகிறது.

இந்தத் தரிசனை பொதுவானதாயினும், இதில் அவர்கள் அடையும் அனுபவம் அவரவர் களுடைய அந்தஸ்துக்கு – படித்தரத்துக்கு – ஏற்ப மாறுபட்டிருக்கும். இறைவனிடமிருந்து நேரடி யாகத் தமது மெய்யுறுதியைப் பெற்ற – அதை வேறு ஆராய்ச்சியாலோ, சிந்தனையாலோ அதிகப் படுத்தாத நபிமார்கள் அந்த மெய்விஸ்வாசத்தின் கண்களாலேயே இந்தத் தரிசனையைக் காண்பார் கள். ஒரு நபியால் உணர்ச்சி ஊட்டப்பட்ட மெய்ஞ்ஞானி அந்த நபியின் கண்ணுடி மூலமே இந்தத் தரிசனையைப் பெறுவார். இவர் தியானச் சிந்தனைகள் மூலமும் இறை ஞானம் பெற்றிருப் பின், இவர் இரண்டு வகையான தரிசனைகளைக் கண்டிருப்பார். ஒன்று, கலைகளுக்குரியது, மற்றது மெய்விஸ்வாசத்துக்கு உரியது... இறைவனிடம் இருந்து மெய்நிலை கண்ட உதிப்பைப் பெற்றவர் கள் நிலை தனியானதோர் உன்னதம் உடைய தாகும். சுருங்கச் சொன்னல் தேர்ந்தெடுக்கப் பட்ட தன் அன்பர்களுக்கு இறைவன் அருளும் மூவகை அம்சங்களும் கீழ்க்கண்ட மூவகையுள் அடங்கும்: இறைவனிடமிருந்து அதீதமான 'வஹி'யைப் பெற்ற நபிமார்கள், தங்கள் போதனை யைப் பின்பற்றிய ஞானநாதர்களை மிகைத்தவர் களாக இருப்பார்கள். நபிமார்களும் அல்லாமல், அவர்கள் கூட்டத்தாரும் அல்லாமல் வெறும் ஞானிகளாக–இறைவனுடைய மெய் நேயர்களாக

இருப்பவர்கள் அறிவை அடிப்படையாகக் கொண்ட மெய்யுறுதியால் இந்தத் தரிசன பாக்கியத்தை அடைந்திருப்பின், இவர்கள் மற்ற ஞானநாதர்களை விடப் படித்தரத்தில் குறைவான வர்களாகவே இருப்பர். ஏனெனில், அறிவு ஒரு திரைபோல் அவர்களுக்கும் ஹக்குக்கும் இடையில் நின்று இடையூறு செய்யும். அதை அகற்ற அவர்கள் செய்யும் முயற்சியும் பயன் தராது. இது போலவே நபிமார்களுடைய கூட்டத்தாரும் நபிமார்களுக்கு வெளியிடப்பட்ட வஹியின் திரையை அப்பால் ஆக்க இயலாதவர்கள் ஆவர். எனவே, சுத்த பரிபூரண திவ்விய தரிசனை நபிமார்களுக்கும், அவர்களைப்போல் இம்மையில் தெய்வ உதிப்பை அடையப் பெற்றிருந்த மெய் ஞானியருக்குமே உரியதாகும்...

திவ்விய தரிசனையில் தன்னைப் பொதுப் படையாக வெளியாக்கிக் காட்டினாலும், இம் மண்ணுலகில் ஒவ்வொருவரும் கொண்டிருந்த மெய்யுறுதியின் அளவுக்கு அவன் நல்லடியார் களிடை அதைத் தரிசிப்பதில் வேற்றுமை உண்டா கிறது. எனவே, தரிசனை ஒன்றுதான்; ஆனால், அது ஏற்கப்படும் படிவங்கள் காரணமாக அது பலவாக ஆகிவிடுகிறது. இந்தத் தரிசனை அந்த நல்லடியார்களை ஒளியால் நிரப்புகிறது; அவர்கள் ஒவ்வொருவரும் மண்ணுலகில் தெய்வக் கோட்பாடு அல்லது கோட்பாடுகளில் இறை உதிப்பை எந்த அளவில் பெற்றனரோ, அந்த அளவில்—அது போல் கூடுதல் அல்லது குறைவான அளவில்— அவர்கள் இந்த ஒளியை அடையப் பெறுகின் றனர்.

இந்த நல்லடியார்களின் உடலில் தெய்வ ஒளி ஊருவி அவர்களிலிருந்து, அது தம்மைச் சுற்றி உள்ள யாவின் மீதும் வெளிச்சம் சிந்துகிறது-கண்ணாடியில் வெளிச்சம் பிரதிபிம்பிக்கப்படுவது போல. இந்தப் பிரதிபிம்பத்தால் உண்டாகும் ஆத்மீக இன்பம், அந்தத் தனித் திவ்விய தரிசனையால் உண்டாகும் இன்பத்தைவிட அதிகமாகவே இருக்கும். காரணம், இந்த நல்லடியார்கள் தெய்வ தரிசனையைப் பெறும்போது தங்கள் சுய உணர்வு அற்றவர்களாக ஆகிவிடுவதால், தரிசனையால் உண்டான இன்பத்தை அவர்கள் பூரணமாக அனுபவிக்க இயலாது போய் விடுகிறது. இன்பத்தை அவர்கள் உணர்ந்தாலும், அந்தத் தரிசனையின் உக்கிரமான ஆட்கொள்ளலால் அதை அவர்களால் அனுபவிக்க இயலவில்லை. ஆனால், பிரதிபிம்பிக்கும் ஒளியின் விஷயத்திலோ அவர்கள் தம்நிலை இழந்துவிடவில்லை. எனவே, அவற்றின் இன்பங்களில் முற்றும் பங்கு பெற முடிகிறது.

"சிசு தாயின் மார்பையும், இரும்பு காந்தத்தையும் தேடிக் கொள்வதுபோல, ஒவ்வொருவரும் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட பங்கை அறிந்து அதைத் தேடிக் கொள்வார்கள். தமக்கு உரியதற்கு அதிகமான படித்தரத்தை அடைவதோ, அடைய நினைப்பதோகூட அவர்களுக்குச் சாத்தியமானதன்று. ஒவ்வொருவரும் தத்தமது படித்தரத்தை ஆர்வத்தோடு நேசிப்பார்கள்; அதைவிட உயரிய படித்தரம் இருக்கும் என்றே எண்ணிப் பார்க்க மாட்டார்கள். இஃது இவ்வாறு இன்றெனின் சொர்க்கம் சொர்க்கமாக இல்லாது துயரம்

நிறைந்த, கசப்பான, ஏமாற்றம் குடிகொண்ட மாளிகையாகவே ஆகிவிட்டிருக்கும். எனினும், உயரிய படித்தரத்தில் உள்ளவர்கள் கீழே உள்ளவர்கள் துய்க்கும் இன்பங்களிலும் பங்கு பெற முடியும்.

'புத்தூஹாத்'தில் நுபுவ்வத் - விலாயத் பற்றி விவரிக்கும் ஒரு பகுதி வருமாறு:

இமாமுஸ் ஸமான் (காலத்தின் இமாமாய் விளக்கும்) கௌதுல் அஃலம் ஷைகு அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் பாபுல் அஸஜில் உபன்னியாசிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டதாக, ஷைகு பஷீரிடமிருந்து கேட்டறிந்த அபுல் பிதாரில் தமாஷ்கி பக்தாதி எம்மிடம் தெரிவித்தார்: "நபிமார்களுக்குப் பட்டம் உண்டு; (இறைவனால்) அவர்களுக்கு அருளப்படாதது எங்களுக்குத் தரப் பட்டுள்ளது.'' இந்த அருள்வாக்கில், "அவர் களுக்குப் பட்டம் கொடுக்கப்பட்டு உள்ளது'' என்பதன் பொருள், "நாங்கள் நபி எனும் (பட்டப்) பெயரை உபயோகிப்பதிலிருந்து தடுக்கப்பட்டுள் ளோம்'' என்பதுதான். பெரியார்களான ஞான நாதர்களுக்குத் தெய்வ உதிப்பு அருளப்பட்டு வரினும், இந்த உண்மை நன்கு ஸ்திரமாக்கப்பட்டு விட்டது. "(இறைவனால்) அவர்களுக்கு அருளப் படாதது எங்களுக்குத் தரப்பட்டுள்ளது'' என்ற (கௌதுல் அஃலமின்) வாய்மொழி, மூஸா (அலை) அவர்களிடம் கிலுரு (அலை) சொன்னது போன்றதுதான். மூஸா நபி இறைவனுடைய நெருக்கமான - அவனோடு வசனிக்கும் கலீ முல்லாஹ்தான். எனினும், சில ஞானம் சம்பந்தப்

பட்டவரை கிலுரு நபியின் உயர்வையும், மெய் உறுதியையும் இறைவன் எண்பித்துக் காட்டினுன். மூஸா நபி கிலுரு நபியைவிட உயர்ந்தவர்கள் என்பதை அறிஞர்கள் அறிவர். ஆனுல், அவர்கள் மூஸா நபியிடம், "மூஸாவே, எனக்கு இறைவன் கற்றுத்தந்துள்ள ஒன்றை (ஞானத்தை) நான் அறிவேன்" என்று கூறினுர்கள்.

"(இறைவனுல்) அவர்களுக்கு அருளப் படாதது எங்களுக்குத் தரப்பட்டுள்ளது" என்ற கௌதுல் அஃலமின் வாய்மொழியின் சரியான பொருள் இதுவேயாகும். 'நபிமார்கள்' என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளதை 'சாதாரண நபி மார்கள்' என்று அவர்கள் திட்டமாக அறிவித் திருந்தால் இது இன்னும் தெளிவாக ஆகி இருக்கும். நபிமார்களே மற்றவர்களை மிகைத் தவர்களாகவே இறைவன் ஆக்கியுள்ளான். அதையும் நாம் மறுக்க இயலாது .....

இவ்வுலகில் மறுமைநாள் வரை நபித்துவம் நீடித்தே இருக்கும். சன்மார்க்க ஒழுக்கத்துக்கான நடைமுறைச் சட்டத்தை அருளுவது நுபுவ்வத்தின் ஓர் அம்சம்தான். இறைவனிடமிருந்து வந்த தகவல்களும் அவனுடைய பிரபஞ்சம் பற்றிய அறிவும் தொடராது துண்டிக்கப்பட்டுப் போவது என்பது சாத்தியமே அன்று. இது நீடிக்காவிடின் பிரபஞ்சமே பிழைத்திருப்பதும், செயல்பட்டுக் கொண்டிருப்பதும் சாத்தியமே அன்று.

"சொல்வீராக, சமுத்திரமே மை ஆகி என் இறைவனுடைய வார்த்தைகளை (எழுதப் புகுந் தால்) அவற்றை எழுதி முடிக்குமுன், சமுத்திரமே

வற்றிவிடும் - அதைப்போல இன்னொரு பங்கு (சமுத்திரத்தைச்) சேர்த்துக் கொண்டால் கூட” (அத் 18: ஆ 109).

இருக்கும் மரங்கள் அனைத்தும் பேனாக்களாகவும், இருக்கும் சமுத்திரங்கள் யாவுமே மையாகவும் இருந்து விவரிப்பினும் இறைவன் உடைய வார்த்தைகளை எழுதி முடிக்க இயலாது. ‘குன்’ (ஆகுக) என்ற வார்த்தையின்றித் தான் எந்த ஒரு பொருளையும் சிருஷ்டிக்கவில்லை என்று இறைவன் அருளியுள்ளான். இறைவனுடைய இந்த வார்த்தைகள் ஒருக்காலும் தொடராது நின்றுவிடமாட்டா. பிரபஞ்சத்துக்கும், அதில் உள்ள சகல உயிர்களுக்கும் இவையே சாரமாகும். நபித்துவம் தன் ஓர் அம்சமான சன்மார்க்க நெறிமுறையை வழங்குதலை முடித்து விட்டால் அதன் மற்ற அம்சங்கள் எங்கே இருக்கும்?

கிதாபுல் அஜ்வீபா

ஷைகுல் அக்பருடைய ‘கிதாபுல் அஜ்வீபா’ விலிருந்து இந்தச் சிறு பகுதியைத் தருவோம். இதில் இறைவனுடைய யதார்த்த இயல்பையும், இறைவனுக்கு மனிதன் தேவையாய் இருக்கிறான் என்பதையும், தன் அகமியத்தை அறிபவன் இறைவனை அறிவான் என்பதையும் அவர்கள் விவரித்து உள்ளார்கள்:

அவன் இருக்கிறான்; அவனுக்கு முந்தியது பிந்தியது, மேலே-கீழே என்பதோ, எங்கே-எப்படி- எவ்விடம் என்பதோ இல்லை. அவன்

(ஆதியில்) எவ்வாறு இருந்தானோ அவ்வாறு இப்போதும் இருக்கிறான். முதல் (அவ்வல்) ஆனதன் ஜீவிதம் அவனே; கடைசி (ஆகிறு) ஆனதன் ஜீவிதமும் அவனே. அகமானதன் ஜீவிதமும், புறம் ஆனதன் ஜீவிதமும் அவனே. எனவே, அவனை அன்றி முதல் என்பதோ, கடைசி என்பதோ, அகம் என்பதோ, புறம் என்பதோ இல்லை. அவன் ஒரு பொருளில் இல்லை. ஒரு பொருளும் அவனில் இல்லை. அவ்வாறு புகுவதோ புறப்படுவதோ இல்லை. அவனைப் பற்றி இந்த முறையில் நீ அறிவது அறிவாலோ, மதி நுட்பத்தாலோ, கற்பனையாலோ, புலன்களாலோ, புறக் கண்களாலோ, அகக் கண்களாலோ சாத்தியம் அன்று. அவன் தன்னால் தானே தன்னைப் பார்த்துக் கொள்கிறான்; தன்னால் தானே தன்னை அறிந்துகொள்கிறான்.

அவனுடைய திரை (அதாவது ஜடதத்துவ ஜீவிதம்) அவன் ஜீவிதத்தின் எந்தக் கல்யாண குணமும் வெளிப்படாத ஏகமான தன்மையை மறைப்பதாகும். அவனையன்றி எதற்கும் ஜீவிதமில்லை; எதுவுமில்லை...... அவனே ஆளுபவன், ஆளப்படுபவன். சிருஷ்டியாளன்- சிருஷ்டிக்கப் படுபவன். அவன் ஆதியில் இருந்ததுபோல் இன்றும் இருக்கிறான்; தன் சிருஷ்டி சக்திக்கும் தன் ஆட்சிப் பொறுப்புக்கும் எந்த சிருஷ்டியின் அல்லது பிரஜையின் உதவியும் தேவை அற்றவன்... இப்போதுள்ள பொருட்களை இவ்வுருக் கொள்ளும்படி அவன் கூறியபோது அவன் தன் கல்யாண குணங்கள் யாவுடனும் இருந்தான். அன்று இருந்தது போலவே இன்றும் இருக்கிறான்.

அவன் ஒருமையில் புதுமையானதற்கும் அசலான தற்கும் பாகுபாடு இல்லை. புதுமை அவன் தன்னைத் தானே வெளிப்படுத்தியதால் வந்தது. அசலானது அவன் தன்னில் தானுய் இருப்பதன் பயனுய் உண்டாயிற்று.

அவனுடையதை அன்றி வேறு ஜீவியமில்லை. "உலகைப் பழிக்காதீர்கள்; காரணம், இறைவனே உலகமாய் இருக்கிருன்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளது இதையே சுட்டிக் காட்டுகிறது. உலகின் உயிர்த்துடிப்பு இறைவன் உடைய ஜீவிதமே. இதில் அவனுக்குப் பங்காளியோ கூட்டாளியோ, சமமானவனே இல்லை என்பதையே இது காட்டுகிறது. "என் அடியாரே, நான் பிணியாய் இருந்தேன், நீர் என்னை வந்து காணவில்லை; நான் உம்மிடம் உதவி கேட்டேன், நீர் தரவில்லை" என்று மூஸா நபி (அலை) அவர்களிடம் இறைவன் கூறியதாக நபிபெருமானுர் அருளியுள்ளார்கள். அதாவது, உதவி கேட்பவனின் ஜீவிதம் அவனுடையது, பிணியாளன் உடைய ஜீவிதம் அவனுடையது என்பதுதானே இதன் தாத்பரியம்! இதை ஒப்புக் கொண்டால், இந்த ஜீவிதம் அவனுடையது, சிருஷ்டிக்கப்பட்ட அனைத்தின் ஜீவிதமும் அவனுடைய ஜீவிதமே என்பது தெளிவாகும். சகல அணுக்களிலும் உண்டான ஓர் அணுவின் மர்மம் தெளிவாயின், சிருஷ்டிக்கப்பட்ட சகல பொருள்களினதும் அகபுற மர்மங்களும் தெளிவாகி விடுமல்லவா! அவ்வாருயின் இவ்வுலகிலோ மறு உலகிலோ நீங்கள் அவனை அன்றி எதையும் காணமாட்டீர்கள். இம்மை மறுமையுடைய ஜீவிதங்களும் அவனுடையவையே.

ரகசியம் உனக்கு வெளியிடப்பட்டால்- மெய் நிலை கண்ட ஞானி தெய்வீகத்தோடு ஒன்றானவர் என்பதை நீ உணர்ந்தால்-அவனைத் தவிர வேறு எதுவுமில்லை, நீ தொடர்ந்தவன், தொடர்பாவாய் என்பதைக் காண்பாய். அப்போது உன் செயல்கள் அவன் செயல்களாகவும், உன் குணங்கள் அவன் குணங்களாகவும், உன் சாரம் அவன் சாரமாகவும் காண்பாய். ஆனால், இவற்றாலெல்லாம் ஓர் அணுக் கூட நீ அவன் ஆக மாட்டாய்; அவன் நீ ஆக மாட்டான். "அவன் வதனமன்றி மற்ற யாவும் அழிபவைதாம்." அதாவது அவன் வதனம் (வஜ்ஹ்) அன்றி எதுவுமில்லை எனவே, நீ "எங்கு திரும்பினாலும் அங்கே இறைவனுடைய வதனமுள்ளது."

தன் பூதஉடலை விட்டு மரணிப்பவன் தன் குணங்களை – போற்றத்தக்கவை, இகழத்தக்கவை ஆகிய யாவையும் ஒருப்போல்— இழந்துவிடுவது போன்று ஆத்மீக மரணத்திலும் போற்றத்தக்க, இகழத்தக்க குணங்கள் யாவும் முடிவுற்று விடு கின்றன. மனிதனுடைய சகல நிலைகளிலும் அழிவுக்கு உரியவையாய் இருந்தவைகளின் இடங் களில் தெய்வீகமானவை ஆட்கொண்டு விடு கின்றன. இவ்வாறு அவன் சாரத்துக்குப் பகர மாக இறைவனுடைய சாரமும், அவனுடைய குணபாவங்களுக்குப் பகரமான இறைவனுடைய குணங்களும் வந்தடுக்கின்றன. தன்னை அறிபவன் தன் முழு ஜீவிதமும் தெய்வீக ஜீவிதமாக இருக்கக் காண்பான். ஆனால், தன் இயல்பிலோ குண பாவங்களிலோ என்ன மாறுதல் உண்டாகியுள்ளது என்பதை அவன் அறியமாட்டான். காரணம், நீ

உன்னை அறிந்ததும் உன் 'நான்-தன்மை' மறைந்துவிடுகிறது; நீயும் இறைவனும் ஒன்று எனக் காண்கிறாய்.

லவாக்கிஉல் அன்வார்

'லவாக்கிஉல் அன்வார்' என்ற நூலில் ஷைகுல் அக்பர் ஹுலூல், இத்திஹாத் போன்றவற்றில் உண்டான தவறான சித்தாந்தங்களைச் சுட்டிக்காட்டும் அருமையான சிறிய பகுதி இது:

மெய்ஞ்ஞானம் அல்லது இறைவனைத் தரிசித்தல் என்பதன் பரிபூரண நிலை யாதெனின் சிருஷ்டிக்கப்பட்டதையும், சிருஷ்டியாளனையும் தனித்தனியே (பிரிவாய்த்) தெரிந்து கொள்ளுதல் தான். இறைவன் இன்றித் தன்னையே தரிசித்துக் கொள்ளுதல் சூனியமான காரியமாகும் என்று மெய்ஞ்ஞானியர் பலரும் தெரிவித்துள்ளனர். இதற்கு முரணான வகையில் பேசுபவர் மெய்ஞ்ஞானியாய் இருக்கமாட்டார்; ஒரு நிலையை அடைந்தவராக இருக்கலாம். நிலையை அடைந்தவர் போதை உடையவர் ஆவார். போதை உடையவருக்கு உண்மை திட்டமாகாது. ஹல்லாஜ் இப்னு மன்ஸூர் (ரஹ்) அவர்கள் 'அனல் ஹக்' (நானே சத்தியம்) என்று சொன்னது போன்ற பேச்செல்லாம் போதையில் (மஸ்தில்) வெளியான கூற்றேயன்றி உள்ளமையை வெளிப்படுத்துவது அல்ல... புதிதாக ஆனது அவ்விதம் புதிதாக ஆன நிலையை விட்டும் மாறாது, அனாதியானவன் புதிதானவற்றில் இறங்கினான் என்று ஏற்படுமாயின் அல்லாஹுத் தஆலா உடல் உடையவன்

என்ற-வழி தவறிய கூட்டத்தாரின்-சித்தாந்தம் சரியாகி விடும். எனவே, அனுதியானவன் ஒரு பொருளில் இறங்குவதும் இல்லை, ஒரு பொருள் அவனில் இறங்குவதற்கு இடமும் இல்லை. ஒருவன் தான் அல்லாஹுத் தஆலாவில் கலந்தவன் என்று வாதாடுவானுயின் அதுவே பிரிதலாய் இருக்கும் .. நீ நீதான், அவன் அவன்தான். ஆனல், ''ஆசை கொண்டவனும் நானே, ஆசிக்கப்பட்டவனும் நானே'' என்று இறைவன்மீது ஆசை கொண்டவர்கள் (ஆஷிகீன்கள்) சொல்கிருர்களே அது எப்படிச் சரியாகும் என்று நீ கேட்கலாம். இது ஆசையும் அன்பும் கொண்ட நாவால் உரைத்த பேச்சே அன்றி, அறிவின் துணையுடன் உண்மையைத் திட்டப்படுத்தும் பேச்சு அன்று. அவனுடைய ஆசை என்ற போதை (மஸ்து) தெளிந்தால் அப்படிச் சொல்வதை விட்டும் அவர்கள் திரும்பி விடுவார்கள். எனவே, நீ அவ்விதம் சொல்லாமல் இருக்கக் கடவாய் என்று உன்னை நான் எச்சரிக்கிறேன்.

தர்ஜுமானுல் அஷ்வாக்

(பேரின்ப ஆசைகளின் கருத்து விளக்கம்)

ஷைகுல் அக்பர் எழுதிய மெய்ஞ்ஞானப் பாடல்களின் தொகுப்பு இது. இவற்றுக்கு அவர்களே கருத்து விளக்கமும் நல்கியிருப்பது இதன் தனிப் பெரும் சிறப்பாகும். முதலில் வெறும் பாடல்களின் தொகுப்பு மட்டும்தான் வெளியாயிற்று. அந்தத் தொகுப்பின் முன்னுரையில் அவற்றில் தெய்வீக அகமியங்கள் நிறைந்திருப்பதாகவும், அவற்றுக்கு இவ்வுலக இன்பங்கள் பற்றிய கருத்து இருப்பதாக யாரும் கருத வேண்டாம் என்றும் அவர்கள்